Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, DECEMBER 15, 2022

வியாழக்கிழமை டிசெம்பர் 15, 2022 | ஒளி: 08 கதிர் 165 | பக்கம்:08 | நகரபதிப்பு | Free



## சீமெந்து விலை குறைப்பு

50 கிலோ கிராம் நிறையுடைய சீமெந்து மூடையொன்றின் விலையை நேற்று (14) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் 225 ரூபாயால் குறைப்பதற்கு சன்ஸ்தா மற்றும் மஹாவலி மரைன் சீமெந்து உற்பத்தி நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன. சன்ஸ்தா மற்றும் மஹாவலி மரைன் சீமெந்து வகைகளை விற்பனை செய்யும் இன்சீ சீமெந்து நிறுவனத்தின் சீமெந்து வகைகளின் விலைகள் குறைக்கப்பட்டு புதிய விலையாக 2,750 ரூபாய் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



உணவு பாதுகாப்பு தொடர்பான

## குறைபாடுகளை கண்டறிவோம்

முதலில் உணவு பாதுகாப்பு தொடர்பான குறைபாடுகளைக் கண்டறிந்து, ஆலோசனைகளுக்கேற்ப இதற்கான தீர்வகளைக் கண்டு, படிப்படியாக முன்னேறுவோம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பான கூட்டு பொறிமுறைக் குழுவின் பிரதிநிதிகளை தெளிவுபடுத்துவதற்காக அலரி மாளிகையில் செவ்வாய்க்கிழமை (13) நடைபெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

நிபந்தனைகள் இன்றி பேச்சுவார்த்தைக்கு சென்றமை

# இனத்துக்கு செய்த பச்சை துரோகம்



அன்ரன் பாலசிங்கம் நினைவேந்தலில் கஜேந்திரகுமார் ஆவேசம்

சமஷ்டி குறித்து வாய் திறக்கவில்லை என்றும் தெரிவிப்பு

எஸ்.நிதர்ஷன்

இலங்கை அரசாங்கம், பொருளாதார நெருக்கடிக்குள் இருக்கின்ற இந்த தருணத்தில், பேரம் பேசக்கூடிய வாய்ப்புக்கள் நிறையவே இருந்தும், எந்தவிதமான நிபந்தனைகளும் இல்லாமல் தமிழ்த் தலைமைகள் பேச்சுவார்த்தைக்கு சென்றமை இனத்துக்கும் தியாகங்களுக்கும் செய்த பச்சைத்துரோகம் என்று பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2





## தமிழ்மிரருக்கு விருது

இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம், இலங்கை பத்திரிகை பேரவையுடன் இணைந்து நடத்திய 2021 ஆம் ஆண்டுக்கான அதி சிறந்த ஊடகவியலாளர்களுக்கான விருது வழங்கும் வைபவம் கல்கிஸ்ஸ மவுண்ட் லேவென்யா ஹோட்டலில் செவ்வாய்கிழமை (13) இரவு நடைபெற்றது. இதில், தமிழ்மிரர் விருது ஒன்றையும் சான்றிதழ் ஒன்றையும் தனதாக்கிக்கொண்டது. சிறந்த கேலிச்சித்திர கலைஞருக்கான (தமிழ்) விருது நாமல் அமரசிங்க பெற்றுக்கொண்டார். சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளர்ளுக்கான "சுப்பிரமணியம் செட்டியார்" (சான்றிதழ்) வடிவேல் சக்திவேல் பெற்றுக்கொண்டார்.

## 5 பொருட்களின் விலைகள் குறைப்பு

பருப்பு, கோதுமை மா உள்ளிட்ட ஐந்து அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை நேற்று (14) முதல் அமுலாகும் வகையில் குறைத்துள்ளதாக லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.

நாடுமுழுவதிலும் உள்ள அனைத்து சதொச விற்பனை நிலையங்களிலும் குறித்த 5 பொருட்களையும் புதிய விலைக்கு கொள்வனவு செய்ய முடியும் என்றும் நிறுவனம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## அரிசி இறக்குமதிக்கு தடைவிதிப்பு



பாசுமதி அரிசி தவிர்ந்த ஏனைய அரிசிகளை இறக்குமதி செய்வதற்கு தடைவிதித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரிசி இறக்குமதியை அனுமதிப்பத்திர முறைமைக்கு உட்படுத்தி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்தத் தடையை விதித்துள்ளார். அதற்கிணங்க, டிசெம்பர் 9ஆம் திகதிக்கு முன்னர் துறைமுகத்துக்கு அனுப்பப்பட்ட மற்றும் கடன்கடிதங்கள் திறக்கப்பட்ட அரிசி இருப்புகளை மாத்திரம் விடுவிக்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய பாசுமதி அரிசியை மாத்திரம் இறக்குமதி செய்ய முடியும் எனவும் ஏனைய அரிசி வகைகளின் இறக்குமதியை நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும் என அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதிக்கான

## காலக்கெடுவை கணிப்பது கடினம்

- ஐ.எம்.எப்பின் இலங்கைக்கான அதிகாரிகள் தெரிவிப்பு
- வருட இறுதிக்குள் அனுமதி கிடைக்காது என்கிறது ரொய்ட்டர்ஸ்

கடன் கலந்துரையாடல்களின் செயல்முறைக்கு நேரம் எடுக்கும் என்பதால், நிதியத்தின் அனுமதிக்கான காலக்கெடுவைக் கணிப்பது கடினம் என்று சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எப்) இலங்கைக்கான அதிகாரிகள் மின்னஞ்சல் மூலம் தெரிவித்துள்ளனர் என்று ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை, இலங்கைக்கு வழங்கவுள்ள கடன் உதவி தொடர்பில் இவ்வருட இறுதிக்குள் உத்தியோகபூர்வமாக அனுமதியளிக்கும் என்று எதிர்பார்க்கப்படவில்லை என்றும் ரொய்ட்டர்ஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

தொடர்ச்சி P2

## பேச்சுவார்தை மாயைக்குள் தமிழர் தரப்பை ரணில் கொண்டு செல்கின்றார்



வெளிநாடுகளுக்கு கண்துடைப்பாக இப்பொழுது இருக்கின்ற பொருளாதார நெருக்கடிகள் அரசியல் நெருக்கடிகளை தீர்க்கவேண்டுமாக இருந்தால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கின்ற ஒரேயொரு ஆயுதம் பேச்சுவார்த்தையாகும். இந்த மாயைக்குள் தமிழர்தரப்பினை கொண்டுபோய் சேர்க்கவேண்டும் என்று ரணில் முனைகின்றார் என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் விநோனோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

உடையார் கட்டுப்பகுதியில் புதன்கிழமை (14) நடைபெற்ற தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் 16 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

எங்களுக்குள் ஒற்றுமை இல்லாத நிலையினை நாங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது இன்றுகூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பால் ஒரு பிரதிநிதியாக நாங்கள் உங்கள் முன் பேசிக்கொண்டிருக்கின்றோம் என்றால் தமிழீழ விடுதலைப் புலிகளினுடைய அர்ப்பணிப்பால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப்புலிகள் இருக்கின்ற காலத்தில் மிகவும் ஒற்றுமையாகவும் நேர்மையாகவும் அர்பணிப்புடனும் செயற்பட்டது என்றார்.

தொடர்ச்சி P2

## முட்டைக்கு புதிய கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்கவும்



மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

சிவப்பு மற்றும் வெள்ளை முட்டைகளுக்கான புதிய கட்டுப்பாட்டு விலையை அறிவிக்குமாறு நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று (14) உத்தரவிட்டுள்ளது.

மேலும், சிவப்பு மற்றும் வெள்ளை முட்டைகளுக்கான அதிகபட்ச சில்லறை விலையை அறிவித்து ஓகஸ்ட் மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பை இரத்து செய்யுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. முட்டை உற்பத்தியாளர்கள் குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன்,

தொடர்ச்சி P2


## இலங்கையின் மூலோபாய திட்டத்துக்கு அங்கீகாரம்

2023 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இலங்கையின் மூலோபாயத் திட்டத்துக்கு, உலக உணவுத் திட்டத்தின் நிறைவேற்றுச் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

உணவுப் பற்றாக்குறையால் ஏற்படக்கூடிய மோசமான நிலையை குறுகிய காலத்தில் குறைப்பதற்காகவும் நாட்டின் உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கு நிலைமையை முன்னேற்றுவதற்காகவும் இலங்கை முன்னெடுத்துவரும் தேசிய மட்டத்திலான

தொடர்ச்சி P2

## தோட்டத் தொழிலாளர்களிடம் பல இலட்ச ரூபாய் நிதி மோசடி



ரஞ்சித் ராஜபக்ஷ


தோட்டத் தொழிலாளர்கள் 197 பேரை மாலைத்தீவுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து, அவர்களிடம் நிதி மோசடி செய்த நபரை கைதுசெய்வதற்கான விசாரணைகளை நாவலப்பிட்டி பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

நாவலப்பிட்டி மற்றும் கினிகத்தேனை-பிளக்வோட்டர் தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களை கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் சந்தித்த குறித்த சந்தேகநபர், மாலைத்தீவில் கட்டப்படும் ஹோட்டல்களுக்கு தொழிலாளர்கள் தேவைப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

குறித்த தொழிலில் மாதம் 1 இலட்சத்து 93ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்கப்படுவதாகவும் அதற்காக தரகருக்கு 30,000 ரூபாயை முதலில் செலுத்த வேண்டும் என தெரிவித்து, 197 தொழிலாளர்களிடம் சந்தேகநபர் நிதி சேகரித்துள்ளமை தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2

## இந்திய – சீன எல்லையில் பதற்றம் தணிக்கப்பட வேண்டும்



தவாங் பகுதியில் நிகழ்ந்த மோதலை அடுத்து, இந்திய - சீன எல்லையில் பதற்றம் தணிக்கப்பட வேண்டும் என்று ஐ.நா வலியுறுத்தியுள்ளது.

இந்திய - சீன ராணுவ வீரர்களுக்கு இடையே நிகழ்ந்த மோதல் குறித்து கருத்து தெரிவித்துள்ள ஐ.நா பொதுச் செயலாளர் அந்தோனியோ குத்தேரஸின் செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் துஜரிக், "இது தொடர்பான அறிக்கையைப் பார்த்தோம். பதற்றத்தைத் தணிக்க இருதரப்புக்கும் ஐ.நா அழைப்பு விடுக்கிறது. இந்த பிரச்சினை வளரக் கூடாது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

அருணாச்சலப் பிரதேச எல்லையில் உள்ள தவாங் பகுதிக்குள் கடந்த 9-ம் திகதி நுழைய முயன்ற சீன துருப்புகளை இந்திய ராணுவம் விரட்டி அடித்தது. அப்போது இரு தரப்புக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இரு தரப்பும் கம்புகளைக் கொண்டு தாக்குதலில் ஈடுபட்டனர். இந்திய இராணுவ வீரர்களின் தொடர் தாக்குதலை அடுத்து, சீன துருப்புகள் பின்வாங்கிச் சென்றன. இதனால், ஊடுருவல் முயற்சி முறியடிக்கப்பட்டது.

ராஜ்நாத் சிங் விளக்கம்: இந்தச் சம்பவம் குறித்து மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராளுமன்றத்தில் விளக்கம் அளித்தார். அப்போது, "அருணாச்சலப் பிரதேசத்தின் தவாங் பகுதியில் யங்ட்சீ என்ற எல்லைப் பகுதியில், எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைத் தாண்டி சீன துருப்புகள் நுழைந்ததை அடுத்து அங்கு மோதல் நிகழ்ந்தது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சீமெந்து விலை குறைப்பு

அதற்கமைய, 50 கிலோகிராம் நிறையுடைய இன்சீ சன்ஸ்தா மற்றும் இன்சீ மஹாவலி மரைன் பிளஸ் சீமெந்து மூடையின் விலை 225 ரூபாவினால் குறைக்கப்படும் என இன்சீ சீமெந்து நிறுவனம் அறிவித்துள்ளது.

நிர்மாணத் தொழில் துறையைக்கு உதவும் வகையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ள நிறுவனம் சீமெந்தின் புதிய விலையாக 2,750 ரூபாயை அறிவித்துள்ளது.



## உணவு பாதுகாப்பு தொடர்பான
# குறைபாடுகளை கண்டறிவோம்

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், “நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, விவசாயமும் பின்னடைவைக் கண்டுள்ளது. அதேபோன்று 2023இல் உலகளாவிய ரீதியில் உணவுப் பற்றாக்குறை ஏற்படவிருப்பதாகவும் எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக உணவு விலை அதிகரிக்கும் என்பதால் அனைத்து மக்களாலும் உணவைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படும். இது எமது நாட்டுக்கு மட்டும் உரித்தான விடயமல்ல. ஐரோப்பாவிலும் இந்நிலைமையைக் காணக்கூடியதாக உள்ளது.இதற்கு முகம் கொடுப்பதற்கு ஏதுவாகவே உணவு பாதுகாப்பு வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்தது.

உணவைப் பாதுகாப்பதே இந்நிகழ்ச்சித் திட்டத்திலுள்ள எமது முதலாவது இலக்கு ஆகும். உணவைப் பாதுகாப்பதன் மூலம் எமது மக்களை பசியிலிருந்து நாம் பாதுகாக்க முடியும்.

கிராம மட்டத்தில் உணவைப் பெற்றுக்கொடுக்க உள்ளோம். நகரங்களிலும் உணவுப் பற்றாக்குறை நிலவுகிறது. சில கிராமங்களில், சிறு நகரங்களில், கொழும்பு போன்ற நகர்புறங்களில் உணவைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அந்த வேலைத்திட்டமே தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்காக அடிப்படை மட்டங்களில் ஐந்து உத்தியோகத்தர்கள் வீதம் நியமிக்கப்பட்டுள்ளனர். அதற்கு அடுத்ததாக பிரதேச செயலகத்தில் பெருமளவிலான உத்தியோகத்தர்களும் இணைப்பு அதிகாரிகளுக்கு மேலதிகமாக திணைக்களங்களில் புறம்பானதொரு அதிகாரிகள் குழுவும் பணியாற்றி வருகின்றது.

உற்பத்தியை பெறுவது மட்டும் போதாது. உணவை விலங்குகளிடமிருந்து மட்டுமன்றி வீண்விரயமாதலில் இருந்தும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதற்கு அடுத்த்தாக அதனை முறையாக களஞ்சியப்படுத்த வேண்டும்.

அதனை தொடர்ந்து வாடிக்கையாளர்களுக்கு அவற்றை உரிய விலையில் பெற்றுக் கொடுக்க வேண்டும். இதுபோன்ற முறையான பொறிமுறைக்கூடாக நாம் இவற்றைச் செயற்படுத்த வேண்டும். இவற்றை செயற்படுத்திக் கொண்டு செல்லும் வழியில் நாம் மேலும் பல புதிய முறைமைகளை இதில் இணைத்துக் கொள்ளலாம்.

இது தொடர்பில் மீளாய்வு செய்து அது தொடர்பில் தேவையானவற்றையும் ஆலோசனைகளையும் மத்திய அரசாங்கத்துக்குப் பெற்றுத் தாருங்கள். அப்போது இணைப்புக் குழு என்ற அடிப்படையில் தேசிய மட்டத்திலான தீர்மானங்களை எம்மால் முன்னெடுக்க முடியும்” என்றார்.

# இனத்துக்கு செய்த பச்சை ...

“பேச்சுவாரத்தைக்கு போவதற்கு முன்னால் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு போலி நம்பிக்கையினை ஏற்படுத்துவதற்கு சமஷ்டியைத்தான் கேட்கப்போகின்றோம். அதை ஏற்காவிட்டால் வெளியேறுவோம் என்று விம்பத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்திவிட்டு பேச்சுவார்த்தையில் சமஷ்டி தொடர்பில் அவர்கள் வாயே திறக்கவில்லை” என்றும் சுட்டிக்காட்டினார்.

தேசத்தின்குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களுடைய நினைவேந்தல், கட்சியின் தலைமைச் செயலகத்தில் நேற்று (14) போதே அவர் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், “ அரசாங்கம், இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஒரு அழைப்பு விடுத்திருக்கின்ற இந்த நேரத்திலே விடுதலைப் புலிகள் இயக்கம் யுத்தம் மௌனிக்கப்படாமல் ஒரு இயங்கு நிலையில் இருந்திருந்தால் எங்களுடைய தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் ஐயாவும் தமிழ்ச்செல்வம் அண்ணனும் அந்த முழுப்பொறுப்பையும் ஏற்று ஒட்டுமொத்த தேசத்துக்காக இந்த நிலைமைகளைக் கையாண்டு இருப்பார்கள்.

சிங்கள பௌத்த தேசிய வாதம் தமிழ் மக்களுடைய நியாயத்தை தவிர்க்க முடியாமல் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நிலைமை உருவாகினால் தமிழ்த் தேசம் சார்பில் ஒரு மிகத்திறமான தீர்வைப்பெற்றுக் கொடுக்கக்கூடிய தரப்பு என்றால் அது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மட்டுமே என்கின்ற ஓர் அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது.

ஒரு உட்சபட்ச தீர்வு எட்டுவதாக இருந்தால் இயக்கம் தான் அதை பெற்றுத்தரும் என்ற நம்பிக்கை எங்களுடைய மக்களிடையே இருந்தது. தமிழீழ இயக்கத்தை விமர்சிப்பவர்கள்கூட தமிழ்த்தேசியம் என்கின்ற கோணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தான் தமிழ் மக்களுக்கு ஒரு உயர்ந்த தீர்வைப்பெற்றுக்கொடுக்கும் என்ற யதார்த்தத்தையும் உண்மையையும் அவர்களால் கூட மறுக்க முடியவில்லை.

இப்படிப்பட்ட தலைமைத்துவத்தோடு ஒப்பிட்டுப்பார்க்கின்ற பொழுது இன்றைக்கு இருக்கக்கூடிய நபர்கள் உண்மையிலேயே அரசியல் கோமாளிகள். இனத்துக்கு வெட்கத்தை ஏற்படுத்துகின்ற நபர்களாகத்தான் அவர்கள் இருக்கிறார்கள்.

இனத்துக்காக எதையும் நடைமுறைப்படுத்தாது தங்கள் எஜமான்களுக்காக இனத்தையே விற்கக்கூடிய ஒரு கேவலமான நபர்களாகத்தான் இன்றைக்கு கட்சித் தலைவர்கள் என்று கூறி பேச்சுவார்த்தைக்கு சென்றிருக்கிறார்கள்.

தமிழ் மக்களுடைய வாக்குகளையே பெற்று ஆட்சிக்கு வந்து அவர்களுடைய நலனினை கருத்திற்கொள்ளாமல் தங்களுடைய சுய இலாபங்களுக்காகவும் வேறு வேறு தேவைகளுக்காகவும் இனத்தை விற்கின்றவர்களாகத்தான் அவர்கள் இருக்கின்றார்கள்.

ஒட்டுமொத்தமாக சிங்கள தேசத்தாலேயே நிராகரிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க ஓர் இனவாத கூட்டதுக்கு கடமைப்பட்டிருக்கிறார் என்பது எல்லோருக்குமே தெரியும். அவருடைய பேச்சுவார்த்தையை நம்பி தமிழினம் சென்று ஒரு விட்டுக்கொடுப்பினைச் செய்தால் அது ஒரு நிரந்தர விட்டுக்கொடுப்பு.

அதிலிருந்து நாங்கள் மீளவே முடியதா அளவுக்குத்தான் நிலைமைகள் இருக்கின்றது. ஆகவே இந்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதால் தமிழினத்துக்கு எந்தவிதமான நன்மைகளும் கிடைக்கப்போவதில்லை.

இவ்வாறான ஒரு நேரத்தில் தமிழினத்துக்கு எந்தவிதமான சாதகமான நிலைப்பாடும் இல்லாமல் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதென்பது இனத்தினுடைய நன்மைக்காகவா என்கின்ற கேள்வியை மக்கள் கேட்க வேண்டும்.

பேச்சுவாரத்தைக்கு போவதற்கு முன்னால் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு போலி நம்பிக்கையினை ஏற்படுத்துவதற்கு சமஷ்டியைத்தான் கேட்கப்போகின்றோம். அதை ஏற்காவிட்டால் வெளியேறுவோம் என்று விம்பத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்திவிட்டு பேச்சுவார்த்தையில் சமஷ்டி தொடர்பில் அவர்கள் வாயே திறக்கவில்லை.

முன்றாம்தரப்பு மத்தியஸ்தம் தொடர்பில் பேசிக்கொண்டு பேச்சுவார்த்தையில் அவர்கள் வாயே திறக்கவில்லை என்பதையே இன்று ஊடகங்களுடைய தலைப்புச்செய்திகளும் வெளிப்படுத்தியிருக்கிறது.

பேச்சுவார்த்தை மேசையில் நீங்கள் போய் அமர்ந்து கொள்வதனூடாகவே ரணிலுக்கான அங்கீகாரத்தை கொடுப்பதாக அமையும் என்பதை இவர்களுக்கு நாங்கள் மீண்டும் மீண்டும் கூறினோம். அவர் இந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து தப்புவதற்கான வாய்ப்பை நீங்கள் கொடுத்துவிட்டீர்கள்.

ஆகக்குறைந்தது அந்த அங்கீகாரத்தை கொடுப்பதாக இருந்தால் இனத்துக்காக கொள்ளை ரீதியிலாகவாவது எங்களுக்கொரு முன்னேற்றத்தை கொடுக்கக்கூடிய சூழலையாவது உருவாக்காமல் அந்த அதிகாரத்தை கொடுப்பதானது எதிர்காலத்தில் எங்களுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும்” என்றார்.

# அரிசி இறக்குமதிக்கு தடைவிதிப்பு

இதேவேளை, வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய பாசுமதி அரிசியை மாத்திரம் இறக்குமதி செய்ய முடியும் எனவும் ஏனைய அரிசி வகைகளின் இறக்குமதியை நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும் என அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

# பேச்சுவார்தை மாயைக்குள் தமிழர்...

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இன்றும் அதே இலட்சிய வேட்கையுடன் விடுதலை உணர்வுடன் செயற்படுகின்றதா என்ன நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதோ அன்று செய்து காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அன்றுபோல் இன்றும் செயற்படுகின்றதா என்ற கேள்வி எங்களுக்கு மட்டுமல்ல உங்களுக்கும் ஏற்பட்டிருக்கின்றது என்றார்.

இன்றைய காலத்தில் மக்களிடத்தில் சந்தேகம் ஏற்படுகின்ற அளவிற்கு கூட்டமைப்பின் செயற்பாடு இருக்கின்றது என்பதை நாங்கள் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்.

எந்த நோக்கத்திற்காக இது உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறும் வரைக்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஓரணியாக பயணிக்கவேண்டும் அந்த விடுதலை இலட்சியத்தை நிதந்தரதீர்வினை தமிழ்மக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் வரைக்கும் நாங்கள் ஓய்ந்திருக்கமுடியாது

ஓய்வோமாக இருந்தால் அல்லது காட்டிக்கொடுப்போமாக இருந்தால் அல்லது திசைமாறி நாங்கள் செல்வோமாக இருந்தால் நாங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் மறைந்த மாவீரர்களுக்கும் அவர்கள் செய்த தியாகத்திற்கும் நாங்கள் செய்யும் மிகப்பெரிய துரோகமாக இருக்கும் என்றார்.

# இலங்கையின் மூலோபாய திட்டத்துக்கு அங்கீகாரம்

முயற்சிக்கு உதவும் வகையில் முன்னெடுக்கப்பட்ட இரண்டாவது கூட்டத்தொடரின்போதே இலங்கையின் மூலோபாய திட்டத்துக்கு உலக உணவு திட்டம் அங்கீகாரம் அளித்ததாக ரோமிலுள்ள அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் டேவிட் எம். பீஸ்லி தெரிவித்துள்ளார்.

உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்குக்காக அரசாங்கம் செய்துள்ள முதலீட்டின் மூலம் கிடைக்கும் பலனை பன்மடங்கு அதிகரிப்பதற்கு அவசியமான தொழில்நுட்ப உதவி மற்றும் கொள்கை ரீதியான ஆலோசனைகளை வழங்க உலக உணவு திட்டம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2023 முதல் 2027 டிசெம்பர் வரையான காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்ட இம்மூலோபாய திட்டத்துக்கான பெறுமதி 74.87 மில்லியன் அமெரிக்க டொலர் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இது, இலங்கையின் தேசியக் கொள்கைக் கட்டமைப்பு மற்றும் 2023-2027 க்கான ஐக்கிய நாடுகளின் நிலைபேண்தகு அபிவிருத்தி ஒத்துழைப்புக் கட்டமைப்பு ஆகியவற்றுடன் இணைந்ததாக முன்னெடுக்கப்படும்.

மேலும் இத்திட்டமானது, நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்கு(SGD)2 இற்கிணங்க, 2030 ஆம் ஆண்டளவில், உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட போஷாக்கு எனும் இலக்கை அடைவதற்கேற்ப நாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இம்மூலோபாயத் திட்டம் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளான 1, 5, 10 மற்றும் 13 ஆகியவற்றின் முன்னேற்றத்துக்கும் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்கு 17 இற்கமைய தேசிய மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி பதில் கூட்டாண்மையை வலுப்படுத்துவதற்கும் உதவவுள்ளது.

இதேவேளை, உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட போஷாக்கை அடைவதற்கும் 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக அதன் நிகழ்ச்சி நிரலுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கும் இலங்கை அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளை உலக உணவுத் திட்டம் வரவேற்றுள்ளது.

# 5 பொருட்களின் விலைகள் குறைப்பு

அதற்கமைய ஒரு கிலோ கிராம் பருப்பு 4 ரூபாயால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 385 ரூபாயும் 15 ரூபாய் குறைக்கப்பட்டு ஒருகிலோ கிராம் கோதுமை மா 250 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படவுள்ளது. பூண்டு, பெரிய வெங்காயம் மற்றும் டின் மீன் ஆகியவற்றின் விலைகள் முறையே 35, 9 மற்றும் 5 ரூபாய்களால் குறைக்கப்பட்டுள்ளன.

ஒரு கிலோ பூண்டு 460 ரூபாய்க்கும், ஒரு கிலோ வெங்காயம் 190 ரூபாய்க்கும், 425 கிராம் நிறையுடன் டின் மீன் 490 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படவுள்ளன.

# காலக்கெடுவை கணிப்பது கடினம்

விடயத்தை நன்னு அறிந்த இரண்டு செய்தி மூலங்களை மேற்கோள் காட்டி ரொய்ட்டர்ஸ் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

மோசமான பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்காக, 2.9 பில்லியன் டொலர் கடன் வசதியைப் பெறுவதற்கு, இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் கடந்த ஜூன் மாதம் பணியாளர் மட்ட இணக்கப்பாட்டுக்கு வந்திருந்தனர்.

இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த ஒப்பந்தத்துக்கு அனுமதி கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாக செப்டம்பரில் இலங்கை தெரிவித்த போதும் அண்மைய மாதங்களில் முன்னேற்றம் மந்த கதியிலேயே காணப்படுகிறது.

மேலும் கடந்த மாதம் இலங்கையின் நிதி அமைச்சர் இந்த கோரிக்கை ஜனவரி வரை நீட்டிக்கப்படலாம் என்று ஒப்புக்கொண்டார் என்றும் அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகளாவிய கடன் வழங்குநர் நிதிகளை வழங்குவதற்கு முன்னர் இலங்கை கடனாளர்களிடமிருந்து முன் நிதியளிப்பு உத்தரவாதங்களைப் பெற வேண்டும் என்பதுடன், அதன் பெரும் கடன் சுமையை நிலையான பாதையில் வைக்க வேண்டும் என ஐ.எம்.எப் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், பொது வருவாயை அதிகரிக்க வேண்டும் என்றும் இலங்கையின் மூன்று முக்கிய இருதரப்பு கடன் வழங்குநர்களான சீனா, ஜப்பான், இந்தியாவை உள்ளடக்கிய கூட்டுப் பேச்சுவார்த்தைகளின் முக்கியத்துவத்தையும் ஐ.எம்.எப் வலியுறுத்தியது.

இல்கை குறித்த கலந்துரையாடல்கள் குறித்து, ஐ.எம்.எப் ஒன்லைன் நாட்காட்டியில் டிசெம்பர் 22ஆம் திகதிவரை எவ்வித விடயங்களும் குறிப்பிடப்படவில்லை என்றும் ரொய்ட்டர்ஸ் குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதியைப் பெறுவதில் 100% கவனம் செலுத்துவதாக விசாரணைக்கு பதிலளித்த இலங்கையின் நிதி அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தோட்டத் தொழிலாளர்களிடம் பல இலட்ச ரூபாய் நிதி மோசடி

பின்னர் கடந்த வருடம் நவம்பர் மாதம் குறித்த தோட்டத் தொழிலாளர்களைச் சந்தித்த சந்தேகநபர், நவம்பர் 15ஆம் திகதி மாலைத்தீவுக்கு செல்ல தயாராக இருக்குமாறும் அதற்கான மருத்துவ பரிசோதனைக்கு 12,500 ரூபாய் தொழிலாளிகளிடம் வசூலித்துள்ளார்.

அத்துடன் அவர்களை இரத்மலைனை பகுதியிலுள்ள வைத்திய மத்திய நிலையம் ஒன்றுக்கு அழைத்துச் சென்று மருத்துவ சான்றிதழையும் பெற்றுக்கொடுத்த பின்னர், சந்தேகநபர் தலைமறைவா கியுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமது வீட்டிலிருந்த நகைகளை அடகு வைத்தும் உறவினர்களிடம் கடன்வாங்கியே சந்தேகநபருக்கு 42,500 ரூபாயை ஒவ்வொருவரும் செலுத்தியுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, தொழிலாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து, சந்தேகநபரைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# முட்டைக்கு புதிய கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்கவும்

மனுவை இன்று (15) பரிசீலிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. மேலும், புதிய கட்டுப்பாட்டு விலை அறிவிப்பை நேற்றைய தினத்துக்குள் அறிவிக்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. வியாபாரிகள் அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்ய ஆரம்பித்ததை அடுத்து, நுகர்வோர் விவகார அதிகாரசபை முட்டைக்கு அதிகபட்ச சில்லறை விலையை விதித்தமை குறிப்பிடத்தக்கது.

பழைய வர்த்தமானிக்கு அமைய சிவப்பு முட்டைக்கு 45 ரூபாயும் வெள்ளை முட்டைக்கு 43 ரூபாயும் அதிகபட்ச சில்லறை விலையாக அறிவிக்கப்பட்டிருந்தது.

# இந்திய – சீன எல்லையில் பதற்றம் தணிக்கப்பட வேண்டும்

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை தன்னிச்சையாக மாற்ற முயன்ற சீன இராணுவத்தின் முயற்சி முறியடிக்கப்பட்டது. உரிய நேரத்தில் இந்திய .ராணுவம் எடுத்த நடவடிக்கை காரணமாக சீன துருப்புகள், தங்கள் பகுதிக்குச் சென்றுவிட்டன.

எல்லையை பாதுகாக்கும் பணியில் இராணுவம் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. இந்த மோதலில் இந்திய தரப்பில் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை. இராணுவ வீரர்கள் சிலருக்கு இலேசான காயங்கள் மட்டுமே ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தை அடுத்து அப்பகுதியின் கமாண்டர் மட்டத்தில் கொடி சந்திப்பு நிகழ்ந்தது. இதில், இரு தரப்பிலும் கமாண்டர்கள் பங்கேற்று, மீண்டும் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் தடுப்பதற்கான வாய்ப்புகள் குறித்து ஆலோசித்தனர். எல்லையில் அமைதி நிலவ சீன தரப்பும் கேட்டுக்கொண்டுள்ளது. இந்த விவகாரம் தூதரக அளவில் கொண்டு செல்லப்படும்” என தெரிவித்தார்.

அமெரிக்கா கருத்து: இந்திய - சீன எல்லையில் நிகழ்ந்த மோதல் குறித்து கருத்து தெரிவித்த வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜீன் பீர்ரி, “பதற்றத்தைத் தணிக்க இரு தரப்பும் உடனடியாக முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. இது மகிழ்ச்சிக்குரிய விஷயம். நிலமையை அமெரிக்கா உன்னிப்பாக கண்காணித்து வருகிறது. பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண இரு தரப்பும் தங்களுக்கு இருக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்” என கூறியுள்ளார்.

## தேசிய டிஜிட்டல் கொள்கையொன்று இல்லாமையால்

# இலங்கை பின்தங்கியுள்ளது

தேசிய டிஜிட்டல் கொள்கையொன்று இல்லாமை காரணமாக உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை கடுமையாகப் பின்னடைந்துள்ளதாகப் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பிலான குறுகிய கால மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காணல் பற்றிய தேசிய பேரவையின் உப குழுவில் கலந்துரையாடப்பட்டது.

உப குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடிய போதே இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

தகவல் தொழிநுட்பத் துறையுடன் தொடர்புபட்ட சிக்கல்கள் மற்றும் அவற்றுக்கான முன்மொழிவுகளை சமர்பிப்பதற்கு அரச மற்றும் தனியார் துறையில் தகவல் தொழிநுட்ப நிபுணர்கள், அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட பலர் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

விசேடமாக E-Governance எண்ணக்கருவின் கீழ் அரச நிறுவனங்களை ஒன்றிணைக்கும் வலையமைப்பை ஸ்தாபிப்பதற்கு முடியாமல் உள்ளமை மற்றும் அந்தக் கொள்கைகளை துரிதமாகத் தயாரித்து அரசாங்கம், பிரஜைகள் மற்றும் வர்த்தகர்களுக்கிடையில் இடைவெளியைக் குறைப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் இந்நாட்டின் தகவல் தொழிநுட்பத் துறை பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும்,



அதில் பல வருடங்கள் அனுபவம் கொண்ட தொழில்வாண்மையாளர்களின் உழைப்பு நாட்டை விட்டு வெளியே செல்வது பிரதான சிக்கலாகும் என இதன்போது தெரிவிக்கப்பட்டது.

தற்பொழுது இலங்கையில் பாடசாலை பாடத்திட்டத்தில் தகவல் தொழிநுட்பப் பாடத்தை அறிமுகம் செய்திருந்தாலும், அதில் துறைசார் நிபுணர்கள் போதியளவு தலையீட்டை மேற்கொள்ள முடியாமல் போயுள்ளமை குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், புதிதாக மேற்கொள்ளப்படும் கல்வி மறுசீரமைப்புகளில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பப் பாடத்தை கட்டாயப் பாடமாகக் கொண்டுவரும் இயலுமை தொடர்பில் கண்டறியுமாறு இதன்போது பரிந்துரைக்கப்பட்டது.

அதேபோன்று, அரச பல்கலைக்கழகங்களில் தகவல் தொழிநுட்பப் பாடத்துடன் சம்பந்தப்பட்ட விரிவுரையாளர்களின் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும் என இங்கு கருத்து முன்வைக்கப்பட்டதுடன், விரிவுரையாளர்களுக்கு ஒரு சில வரி நிவாரணத் திட்டத்தை தயாரிப்பது பொருத்தமானது என குழுவில் முன்மொழியப்பட்டது.

இலங்கையில் தகவல் தொழிநுட்பத் துறையின் உழைப்பின் தரமான தன்மை உயர்ந்தளவில் காணப்படுவதாக துறைசார் நிபுணர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர். அதனால் துறைசார் உழைப்புக்கான கேள்வி தொடர்பில் பாரிய சிக்கல்கள் இல்லை என்பதால், நாட்டிலிருந்து வெளியேறாமல் ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராஜ்ஜியம் போன்ற நாடுகளிலுள்ள நிறுவனங்களில் பணியாற்றுவதற்கு அனுமதிப்பதன் மூலம் நாட்டிற்குள் வரும் வெளிநாட்டு செலாவணியை அதிகரிக்க முடியும் என்றும் இதன்போது குறிப்பிடப்பட்டது. அதற்கு மேலதிகமாக தற்போதைய மின்சார நெருக்கடியினால் ஏற்படும் மின் வெட்டு காரணமாக சிறிய அளவிலான தகவல் தொழிநுட்ப நிறுவனங்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாவது மற்றும் பாரிய நிறுவங்களின் மின்சக்தி செலவு அதிகரிப்பது பற்றியும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

அண்ணளவாக 3.47 மில்லியன் டொலர்களான இலங்கையின் 'டிஜிட்டல் பொருளாதாரம்' மொத்த பொருளாதாரத்தின் 4.7 % என்பதுடன், உலகிலுள்ள ஏனைய நடக்குகளுடன் ஒப்பிடும் போது அது 15% அளவில் காணப்படுவதாக குழுவில் கலந்துரையாடப்பட்டது. அதேபோன்று, சிறிய அளவிலான விற்பனையாளர்களுக்கு கப்பல் கட்டணம், தபால்க் கட்டணம் மற்றும் கூரியர் சேவைக் கட்டணம் போன்ற ஏற்றுமதி செலவுகளை குறைத்துக்கொள்ள ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் வேலைத்திட்டமொன்றை மேற்கொள்வதன் அவசியம் குறித்தும் நிபுணர்கள் சுட்டிக்காட்டினர்.

## கடலட்டைப் பண்ணைக்கான அனுமதியை கோரி பேரணி

கடலட்டைப் பண்ணையை விரைவுபடுத்த வலியுறுத்தி பூநகரியில் அமைதிப் பேரணி ஒன்று நடத்தப்பட்டுள்ளது. சுமார் நூற்றுக்கு மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் கலந்து கொண்ட இந்தப் பேரணி இன்று பூநகரி அன்னை மரியாள் தேவாலயத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு பூநகரி பிரதேச செயலகத்தினை சென்றடைந்ததுடன், பூநகரி பிரதேச செயலரிடம் மகஜரும் கையளிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் பல்வேறு தொழில் முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த போதிலும், தற்போதைய நிலையில், பொருளாதார சுமைகளை எதிர்கொள்ளுமளவிற்கு போதுமானளவு வருமானத்தினை பெறமுடியாத நிலை காணப்படுகின்றது.


இதனால், நல்ல வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய கடலட்டைப் பண்ணையை அமைப்பதற்கு தீர்மானித்து, அதற்கான விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட திணைக்களங்களுக்கு




சமர்ப்பித்திருப்பதாக தெரிவித்துள்ள கிராஞ்சிக் கடற்றொழிலாளர்கள், தமக்கான அனுமதிகளை வழங்குவதற்கு தேவையற்ற காலஇழுத்தடிப்பு மேற்கொள்ளப்படுவதாக குற்றஞ்சாட்டியதுடன், தமது ஆதங்கத்தினை சம்மந்தப்பட்ட திணைக்களங்களுக்கு தெரியப்படுத்தும் வகையில் இந்த அமைதி முறையான பேரணியை மேற்கொண்டதாக தெரிவித்துள்ளனர்.

அத்துடன், அநீதியான முறையில் மேற்கொள்ளப்படுகின் போராட்டத்திற்கு, குறுகிய அரசியல் நலன்களுக்காக ஆதரவு தெரிவித்த அரசியல்வாதிகளுக்கும், கடற்றொழில் சங்க பிரதிநிதிகளுக்கும் எதிரான பதாகைகளும் இன்றைய பேரணியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வளவுகளின் உடைமையை மீளப்பெற ஆலோசனைக் குழுவில் அனுமதி



குத்தகைக்கு கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல் சட்டமூலத்துக்கு நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் யாப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் யாப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு அதன் தலைவர் அமைச்சர் சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ தலைமையில் பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (13) கூடிய போதே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

அதேபோன்று, புனர்வாழ்வுப் பணியகம் சட்டமூலம் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய உரிய திருத்தங்களை சட்டமூலத்தில் உள்வாங்கியுள்ளதாக அமைச்சின் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். அதற்கமைய, இந்தச் சட்டமூலம் தொடர்பில் மேலும் ஆராய்ந்து அடுத்த அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் கருத்திற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

## அதிகாரப்பூர்வ பத்திரத்தை கையளித்தார் ஜனாதிபதி ரணில்



வரலாற்றுச் சிறப்புமிக்க ஹுனுப்பிட்டிய கங்காராம விஹாரையை புண்ணிய பூமியாக அபிவிருத்தி செய்வதற்கான அதிகாரப்பூர்வ பத்திரத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஹுனுப்பிட்டிய கங்காராம விஹாரையின் விகாராதிபதி வணக்கத்துக்குரிய கலபொட ஞானிஸ்ஸர நாயக்க தேரரிடம் கையளித்தார்.

ஹுனுப்பிட்டிய கங்காராம விகாரையின் வணக்கத்துக்குரிய கலபொட ஞானிஸ்ஸர நாயக்க தேரரின் ஜனன தினத்தை முன்னிட்டு விஹாரைக்கு நேற்று (14) விஜயம் செய்த ஜனாதிபதி, தேரரிடம் நலம் விசாரித்தார்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பௌத்த மக்களால் பெரிதும் மதிக்கப்படும் ஹுனுப்பிட்டிய கங்காராம விஹாரையை பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவது தொடர்பான அதிகாரப்பூர்வ பத்திரத்தில் ஜனாதிபதி கையொப்பமிட்டார்.

கங்காராம விஹாராதிபதி வணக்கத்திற்குரிய கலாநிதி கிரிந்தே அஸ்ஸஜி தேரர் தலைமையில் மகா சங்கத்தினர், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ , முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ , அமைச்சர் பந்துல குணவர்தன, பாராளுமன்ற உறுப்பினர் பைசர் முஸ்தபா, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, உபாலி குழுமத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் நிமல் வெல்கம மற்றும் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## கடல் பார்க்க வந்த சிறுவர்கள் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைப்பு

ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியா பிரதேசத்திலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்குச் சொந்தமான லொறியில் ஏறி, கடல் பார்ப்பதற்காக கொழும்புக்குச் சென்ற நிலையில், நிட்டம்புவ பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நான்கு சிறுவர்களும் 3 மாதங்களுக்கு அரசாங்கத்தின் கீழ் பராமரிக்கப்படும் சிறுவர் பராமரிப்பு நிலையம் ஒன்றில் தங்க வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வாரந்தோறும் அவர்கள் தொடர்பான அறிக்கையை நீதிமன்றில் முன்வைக்குமாறு நுவரெலியா நீதிவான் நீதிபதி திலின மஹேன் பீரிஸ் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் 3 மாதங்கள் நிறைவடைந்த பின்னர், அச்சிறுவர்களை மீண்டும் அவர்களது பழைய சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் சேர்க்குமாறும் நேற்று முன்தினம் (13) உத்தரவிட்டுள்ளார்.

நுவரெலியா பிரதேசத்திலுள்ள தனியார் சிறுவர் பராமரிப்பு நிலையத்திலிருந்து இந்த மாதம் 12ஆம் திகதி, காலையில் சிறுவர்கள் பராமரிப்பு நிலையத்துக்குச் சொந்தமான லொறியில் ஏறி சிறுவர்கள் நால்வரும் கொழும்புக்கு பயணித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் அதிகாரியால் நுவரெலியா பொலிஸ் நிலையத்துக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, நுவரெலியா பொலிஸார் நாடுபூராகவுமுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்க நடவடிக்கை




எடுத்திருந்தனர்.

4 சிறுவர்களுடன் பயணித்த லொறி, நிட்டம்புவ பிரதேசத்தில் விபத்தொன்றை ஏற்படுத்தி தப்பிச் சென்ற போது, நிட்டம்புவ பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு சிறுவர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

குறித்த சிறுவர்களை கைதுசெய்த நிட்டம்புவ பொலிஸார், நுவரெலியா பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்ததுடன், சிறுவர்களிடம் முன்னெடுத்த விசாரணைக்கு அமைய தாம் யாருக்கும் தெரியாமல் கடல் பார்க்க வந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் லொறியையும் 14 வயதான சிறுவன் ஒருவனே செலுத்தி வந்துள்ளமை தெரியவந்துள்ளதுடன், கைதுசெய்யப்பட்ட சிறுவர்கள் நால்வரும் நுவரெலியா நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது லொறியை செலுத்திய 14 வயது சிறுவனை கம்பளையிலுள்ள சிறுவர் இல்லமொன்றிலும் ஏனைய மூவரையும் நுவரெலியாவிலுள்ள மற்றுமொரு சிறுவர் இல்லத்திலும் 3 மாதங்கள் தடுத்து வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



## இலங்கையின் தேசிய மலர் நீலோற்பலமா?

இலங்கையின் தேசிய மலர் அல்லி மலரா? அல்லது நீலோற்பலமா? (நில் மானல்) என்பது தொடர்பில் சுற்றாடல் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

அமைச்சர் நசீர் அஹமட் தலைமையில் அண்மையில் நடைபெற்ற சுற்றாடல் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தாவரவியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் தீப்தி யகந்தாவல மற்றும் வயம்ப பல்கலைக்கழத்தின் விவசாய மற்றும் பெருந்தோட்டமுகாமைத்துவ பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் கபில யகந்தாவல ஆகியோர் பல ஆண்டுகளாக தீர்மானம் எடுக்கப்படாது சர்ச்சையில் காணப்படும் இலங்கையின் தேசிய மலர் குறித்த விடயம் தொடர்பில் நீண்ட விளக்கமளித்தனர்.

பேராசிரியர் யகந்தாவல முன்வைத்த கருத்துக்களின் படி 1986ஆம் ஆண்டு பெப்ரவரி 26ஆம் திகதி இலங்கையின் தேசிய மலர் தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைய தேசிய மலர் நீலோற்பலம் (நில் மானல்) என்பது உத்தியோகபூர்வமாக அமைச்சரவைப் பத்திரம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் நீலோற்பலத்தை சித்தரிக்கும் விதத்தில் ஊதா நிறம் சார்ந்த அல்லி மலரின் புகைப்படமே பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும், இது உண்மையான நீலோற்பலம் இல்லையென்றும் அவர் தெரிவித்தார்.

1986ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்தத் தவறு பேராசிரியர் உள்ளிட்ட குழுவினரால் 2010ஆம் ஆண்டு அப்போதிருந்த ஜனாதிபதி, சுற்றாடல் அமைச்சர், சுற்றாடல் அமைச்சின் செயலாளர் மற்றும் உயிர்பல்வகைமை செயலகம் ஆகியவற்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய 2015ஆம் ஆண்டு தேசிய மலர் குறித்த சரியான படம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் 2015ஆம் ஆண்டு சுற்றாடல் அமைச்சினால் சரியான மலரின் புகைப்படம் வெளியிடப்பட்டிருந்தபோதும், இலங்கையின் தேசிய மலரின் சிங்களப் பெயர் மானல் மலர் (அல்லி மலர்) என்றும், ஆங்கில மொழியில் புளூ வோட்டர் லில்லி என்றும் தமிழில் நிலோற்பலம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள மொழியில் புலமை பெற்ற பேராசிரியர் விமல் ஜீ. பலகல்ல அவர்களின் நிலைப்பாட்டுக்கு அமையவே நீலோற்பலம் (நில் மானல்) என்ற பெயருக்குப் பதிலாக தேசிய மலராக மானல் (அல்லி) எனப் பெயரிடப்பட்டுள்ளது என சுற்றாடல் அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர். அவரது கருத்துப்படி, அல்லி என்பது உன்னதமான நீல மலர் என்பதால் தேசிய மலரின் சிங்களப் பெயரை மானெல் (அல்லி) எனப் பயன்படுத்த வேண்டும் எனக் கூறியதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

தாவர வகைப்பாட்டின் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைகளின்படி, அறிவியல் பெயர் மாற்றத்திற்கு உட்பட்டிருக்கலாம், ஆனால் மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட சாதாரண மக்களில் பயன்படுத்தப்படும் பொதுவான பெயர்களை மாற்றக்கூடாது என்று வலியுறுத்தினார்.

அல்லி என்பது ஒரு பொதுவான பெயர் எனவும், இலங்கையில் ஊதா நிற அல்லிகள், வெள்ளை அல்லிகள், நீல அல்லிகள் என பல வகையான அல்லிகள் இருப்பதால், இலங்கையின் தேசிய மலராக நிலோற்பல மலரை தெரிவு செய்ய வேண்டும் எனவும் இரு பேராசிரியர்களும் தெரிவித்தனர்.

1986 இல் தேசிய மலரைத் தேர்வுசெய்த குழுவினால் பரிலீலிக்கப்பட்ட அளவுகோல்களான, பூர்வீகம் மற்றும் தனித்தன்மை, பயன்பாடு, வரலாற்று மற்றும் கலாச்சார முக்கியத்துவம், தோற்றம் மற்றும் விரிவாக்கம் என்பவற்றுடன், மேலதிக அளவுகோல்களான நிறம் மற்றும் வடிவம், இனப்பெருக்கம் மற்றும் வேறொரு நாட்டின் தேசிய மலராக இல்லாமை போன்ற சகல அடிப்படைகளையும் பூர்த்தி செய்யும் மலராக நீலோற்பலம் காணப்படுவதாக பேராசிரியர் குறிப்பிட்டார்.

முத்திரைப் பணியகம் நீலோற்பலம் மலருக்குப் பதிலாக தவறான அல்லி மலரின் படத்தையே வெளியிட்டிருப்பதாகப் பேராசிரியர் தீப்தி யகந்தாவல குறிப்பிட்டார். பாடப் புத்தகங்களில் தவறான மலரின் படம் இருப்பதாகவும், பாடசாலைகளில் மாத்திரமன்றி சில உயர்கல்வி நிறுவனங்களிலும் தவறான மலரின் படத்தைக் காட்டி பாடம் நடத்தப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், புத்தகங்களில் மட்டுமின்றி வழிபாட்டுத் தலங்களுக்கு அருகில் நீலோற்பலம் (நில் மானல்) என விற்கப்படுபவை கூட உண்மையான நீலோற்பல மலர்கள் அல்ல என்பதும் இந்த இரு ஆய்வாளர்களின் கருத்தாக இருந்தது.

இதனைப் பரிசீலித்து பரிந்துரைகளை வழங்குவதற்காகக் கௌரவ பிரதமரினால் நிபுணர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதாக குழுவின் தலைவர் அமைச்சர் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயம் என்பதால் விரைவில் உறுதியான தீர்மானத்தை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினர்.

இது தவிர, சுற்றுச்சூழல் அமைச்சகத்துடன் இணைந்த நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்தும் ஆலோசனைக் குழுவில் விரிவாக ஆராயப்பட்டது. பல்வேறு திட்டங்களுக்கு சுற்றாடல் அமைச்சிடமிருந்து உரிமைம் பெறுவது, அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களால் நடமாடும் சேவைகளை முன்னெடுப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இந்த சந்திப்பில் பல பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டதுடன், சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்தியகலாதிதி அனில் ஜாசிங்க உட்பட சம்பந்தப்பட்ட நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

2015 இல் அமைச்சரவைப் பத்திரத்தில் உள்வாங்கப்பட்ட நீலோற்பல மலரின் புகைப்படம் என பேராசிரியர் யகந்தாவலவினால் அனுப்பப்பட்ட படம் இணைக்கப்பட்டுள்ளது.

# ‘அகற்ற தயார்’

நிதர்ஷன் வினோத்




கடலட்டைப் பண்ணைகள் சரியான முறையில் உரிய நியதிகளுக்கு அமைய முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள குருநகர் கடலட்டைப் பண்ணையாளர்கள், சட்டவிரோத பண்ணை இருந்தால் காட்டுங்கள் அதனை அகற்றுவதற்கு தயாராக இருக்கிறோம் என்றனர்.

கடற்றொழிலாளர்களின் வாழ்வில் ஏற்படுத்தப்பட்டு வருகின்ற பொருளாதார மீட்சியை குழப்புகின்ற வகையில் கடலட்டைப் பண்ணை தொடர்பாக வெளியாகி வருகின்ற கருத்துக்கள் எமக்கு வேதனை தருகிறது.

கடலட்டைப் பண்ணைகள் அனைத்து நடைமுறைகளையும் பின்பற்றியே அமைக்கப்பட்டு வருகின்றது. எனினும் சில கடலட்டைப் பண்ணைகளுக்கான அனுமதிப் பத்திர ஆவணங்கள் இதுவரை கிடைக்கவில்லை. அதற்காக அவற்றை சட்ட விரோத பண்ணைகளாக கருத முடியாது.

கடலட்டைப் பண்ணை சட்டவிரோதமானது என பேசுகிறார்கள். அதைப் பற்றி எமக்குத் தெரியாது அதைப் பற்றி நாம் பேசப்போவதும் அல்ல. நாம் எமது பகுதிகளில் கடலட்டை வளர்ப்புக்காக உரிய அனுமதிகளுக்கு விண்ணப்பித்தும் அனுமதி பெற்றும் அட்டை வளர்ப்பில் ஈடுபட்டு வருகிறோம்.

சிலர் கடல் மாசடையும். மீன்வளம் பெருகாது என ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கின்றனர். அட்டை வளர்ப்பில் ஈடுபடும் கடல் பகுதியானது சுமார் ஒரு அடி கடல் நீர் உள்ள சூடான பகுதியிலே மேற்கொள்ளப்படுகிறது. சூடான நீரில் மீன்கள் இனப்பெருக்கம் செய்வதோ அல்லது முட்டையிடுவது மிகவும் சாத்தியம் குறைவு. இதைப் பற்றி பேசுபவர்களுக்கு அனைத்து விடயங்களும் தெரிந்தும் மக்களை குழப்பும் வகையில் முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

மக்கள் எதிர்கொள்கின்ற பொருளாதார நெருக்கடிகளை கருத்தில் எடுத்து, கடற்றொழில் அமைச்சர் இருக்கின்ற காலப் பகுதியில் எமது மக்களுக்கான நிரந்தர வாழ்வாதாரத்தினை உறுதிப்படுத்திவிட வேண்டும். எனினும், குறித்த தளுவல் அனுமதிகள் அமைச்சரினால் தான்தோன்றித்தனமாக வழங்கப்படுவதில்லை.

கடற்றொழில் சங்கங்கள், நீரியல் திணைக்களம், நாரா, நக்டா, சம்மந்தப்பட்ட பிரதேச செயலகம் உட்பட்ட சம்மந்தப்பட்ட திணைக்களங்கள் பரீட்சித்து, குறித்த இடத்தில் கடலட்டைப் பண்ணைகளை அமைக்கப்படுகிறது.

நீர் வாழ் உயிரினங்களுக்கோ அல்லது சூழலுக்கோ எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என்பதை உறுதிப்படுத்திய பின்னர், சம்மந்தப்பட்ட பிரதேசத்தினை சேர்ந்த கடற்றொழில் சங்கங்களுடன் புரிந்துணர்வை ஏற்படுத்திய பின்னரே, பண்ணைகள் அமைப்பதற்கு அனுமதிகள் அளிக்கப்படுகின்றன.

குருநகர் மற்றும் அல்லைப்பிட்டிப் பகுதிகளில் காணப்படும் கடல் அட்டைப் பண்ணைகள் கடற்றொழில் சங்கத்தின் அனுமதி நீரியல் திணைக்களம் மற்றும் தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அதிகார சபை ஆகியவற்றின் அனுமதி பெற்றுச் செயல்படுத்தப்படுகிறது.

ஆகவே, மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் முகமாக ஒரு சிலர் செயல்படுவது கவலை அளிக்கின்ற நிலையில் சட்ட விரோத பண்ணைகள் இருக்கிறது எனக் கூறுபவர்கள் அதனை இனங்காட்டுங்கள் அகற்றுகிறோம் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## ஒதியமலைக்கு பேருந்து வேண்டும்

நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு ஒதியமலைக் கிராமத்துக்கு 13 ஆண்டுகளாக ஒழுங்காக பேருந்து சேவைகள் இடம் பெறுவதில்லை கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

1984 ஆம் ஆண்டிற்கு முன்னர் முல்லைத்தீவு நகரத்தில் இருந்து இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவை இடம் பெற்ற நிலையில் இக்கிராம மக்கள் இடம் பெயர்ந்து 2010 ஆம் ஆண்டில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு தற்போது பாடசாலையும் இயங்கி வரும் நிலையில் இக்கிராமத்துக்கான பேருந்து சேவைகள் இடம் பெறவில்லை.

இதன் காரணமாக இக்கிராம மக்கள் நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலைக்கோ தண்டுவான் கிராமத்தில் மாதந்தோறும் நடைபெறுகின்ற மகப்பேற்று பெண்களுக்குரிய சிகிச்சைகளுக்கு செல்வதற்கோ முடியாத நிலைமை காணப்படுகின்றது.

## தங்கத்தினை கையளித்த வணிகர்களுக்கு மதிப்பளிப்பு

செ.கீதாஞ்சன்



புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இரண்டு வணிகநிலையங்களில் பொதுமக்கள் தவறவிட்ட பெறுமதியான தங்க நகைகளை உரியவர்களிடம் கையளித்த இரண்டு வணிகர்களுக்கான மதிப்பளிக்கும் நிகழ்வு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை (13) நடைபெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு தீன்சுவை வெதுப்பகதில் பொருட்கள் வாங்கிய போது ஆறரை பவுண் நிறையுடைய தாலிக்கொடியினை தவற விட்ட நிலையில் அதனை கண்டெடுத்த தீன்சுவை வெதுப்பகத்தில் முகமையாளராக பணியாற்றும் இ. செந்தில்நாதன் கண்டெடுத்து புதுக்குடியிருப்பு வணிகர் சங்கத்தின் தலைவர் த.நவநீதனுக்கு தெரியப்படுத்தி அந்த ஆறு பவுண் தாலிக்கொடியினையும் தவறவிட்ட உரிமையாளரிடம் கையளித்துள்ளார்

அதுபோன்று புதுக்குடியிருப்பு மருதம். வாணிபத்தின் உரிமையாளர் யோ.மனோதாஸ் ( ஐயா) தனது வர்த்தக நிலையத்தில் ஒரு கைசெயின் ஒன்றினை (முக்காப்பவுண்) கண்டெடுத்து மூன்றுநாட்களாக முகநூல்வழியாகவும் வேறு வழிகளிலும் தகவலை பகிர்ந்து கைச்செயினை தவற விட்ட உரிமையாளரை இனம் கண்டு அடையாளத்தை உறுதிப்படுத்தி உரியவரிடம் ஒப்படைத்துள்ளார்

## மின்சாரம் தாக்கி இளைஞன் பலி

செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு விசுவமடுபகுதியில் இரும்பு ஒட்டும் கடையில் மின்சாரம் தாக்கியதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளான்.

மூங்கிலாறு வடக்கு உடையார் கட்டுப்பகுதியில் வசித்துவரும் 17 அகவையுடைய இளைஞன், குடும்ப கஷ்டம் காரணமாக விசுவமடு 10 ஆம் கட்டைப்பகுதியில் உள்ள இரும்பு ஒட்டும் கடைஒன்றில் வேலைசெய்துவந்தார்.

தொழில் கருவிக்கு நேற்று (14) காலை மின்இணைப்பினை இணைக்கும் முயற்சியினை மேற்கொண்டபோது மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளான்.

## சுண்ணாம்புக்கல் அகழ்ந்த உழவு இயந்திரங்கள் சிக்கின

நிதர்ஷன் வினோத்

வயாவிளான் குட்டியப்புலம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் சுண்ணாம்புக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூன்று உழவு இயந்திரங்கள் கைப்பெற்றப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அவர்களின் கீழ் இயங்கும் புலனாய்வு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் போது உழவு இயந்திர சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், உழவு இயந்திரங்களும் சுண்ணாம்பு கல்லுடன் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன

## பாடசாலையில் மரங்கள் வீழ்ந்தன

நடராசா கிருஸ்ணகுமார்

காற்றுடன் கூடிய மழை காரணமாக கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் மரங்கள் முறிந்து வீழ்ந்து உள்ளதாக கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தெரிவித்தார்.

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் கடந்த ஒரு வார காலத்தில் இடம் பெற்ற




புயலுடன் கூடிய மழை காரணமாக பாடசாலைகளில் சேதங்கள் ஏற்பட்டதாக பாடசாலை அதிபர்களினால் அறிவிக்கப்படவில்லை.

ஆனால் கிளிநொச்சி நகரத்தில் உள்ள கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் பல மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. மாணவர்கள் ஆசிரியர்கள் பாடசாலை சூழலை அழகாக வைத்திருப்பதற்காக நாட்டியிருந்த மரங்களே முறிந்து வீழ்ந்துள்ளன எனவும் தெரிவித்தார்.

# ‘சிங்கள தேசம் கச்சிதமாக செய்கிறது’

வசந்தி

தமிழ் மக்களுடைய காணியைச் சுவீகரிக்கின்ற செயற்பாட்டை சிங்கள தேசம் மிகவும் கச்சிதமாக செயற்படுத்தி வருகின்றது. தொல்பொருள் இடங்கள் என்ற போர்வையில் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக இடங்களை கையகப்படுத்தி, அந்த இடங்களை அவர்களின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு அவர்கள் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றார்கள் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் தெரிவித்துள்ளார்.

போரதீவுப்பற்றுப் பிரதேசத்தில் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், எல்லைக்கற்றகள் இடுவதற்கு முயற்சித்தவேளை மக்களின் எதிர்பால் அது நடைபெறவில்லை. இவ்விடயம் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப்பற்றுப் பிரதேசத்தில்



26 இடங்களில் தொல்பொருட்கள் இருப்பதாகத் தெரிவித்து தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் திங்கட்கிழமை (10) அப்பகுதிக்கு விஜயம் செய்திருந்தனர். அத்திணைக்களத்தினரது செயற்பாடுகளுக்கு அப்பகுதி மக்களின் பலத்த எதிர்ப்பால் அவர்களது நடவடிக்கைகளை மேற்கொள்ளாது திரும்பிச் சென்றுள்ளார்கள்.

தமிழ் மக்களினது காணியைச் சுவீகரிக்கின்ற செயற்பாட்டை சிங்கள தேசம் மிகவும் கச்சிதமாக செயற்படுத்தி வருகின்றது. தொல்பொருள் இடங்கள் என்ற போர்வையில் வடகிழக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக இடங்களை கையகப்படுத்தி, அந்த இடங்களை அவர்களின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு அவர்கள் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றார்கள்.

மாறாக தமிழ் மக்களுக்கு எதிராக தாம் எதுவித செயற்பாடுகளையும் செய்யவில்லை என உலகத்திற்கும் தெரிவித்து வருகின்றார்கள். அனைத்துக் கட்சிகளின் சந்திப்புக்களூடாக, தமிழ் மக்களினாலும் தான் அங்கீகரிக்கப்படுவதாக ஜனாதிபதி அவர்கள் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவார். இந்நிலையில் அனைத்துக் கட்சிகளைச் ஜனாதிபதி சந்தித்து வருகின்ற போதிலும், வடக்கு கிழக்கிலே தமிழர்களின் இருப்பை அழிக்கும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

எனவே, உலக மக்கள், சர்வதேச அமைப்புக்கள் அனைவரும் தமிழ் மக்களின் நிலமையைக் கருத்திற் கொண்டு ஒரு சரியான அரசியல் தீர்வை எட்டும் வரைக்கும், போலித்தனமான அரசியல் தலைவர்களைச் சந்திப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இதில் மக்கள் தொடர்ந்தும் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

## டெங்கு வலயம் பிரகடனம்



எம்.எஸ்.எம். ஹனிபா

அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி பிரிவு டெங்கு நோய் பரவக் கூடிய வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக, கல்முனைப் பிராந்திய தொற்றா நோய் பிரிவின் வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.சி.எம். பஸால் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் முன்னெடுக்கப்படவுள்ள டெங்கொழிப்பு நடவடிக்கை தொடர்பான கருத்தரங்கு செவ்வாய்க்கிழமை (13) சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தில் சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.எம். இஸ்மாயில் தலைமையில் நடைபெற்றது.

## குறுந்திரைப்படம் வெளியீடு

ஏ.எச்.ஏ. ஹுசைன்

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை ஒன்றாக ஆவணப்படுத்தும் ‘ஆதாரம்’ நூலின் வெளியீட்டு நிகழ்வும் இரு சமூக சகவாழ்வை முன்னிறுத்தும் ‘நொச்சிமுனை தர்ஹா’ ஆவணப்படம் திரையிடலும் மட்டக்களப்பு சுகந்தி திரையரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை (09) இடம்பெற்றது.

இலங்கையின் கிழக்கில் நிகழ்ந்த ஐந்து துன்பியல் சம்பவங்களின் மாற்று ஆவணமான இந்நூலை எம். ஐ. ஜாபிர் (ஆத்மா ஜாபிர்) எழுதியுள்ளார்.

இந்நூலில்



இடம்பெற்றுள்ள ஒரு கட்டுரையின் அடிப்படையில் அவர் எழுதி இயக்கிய ‘நொச்சிமுனை தர்ஹா - சகவாழ்வின் கடைசிக் கோட்டை’ ஆவணத் திரைப்படமும் நிகழ்வில் திரையிடப்பட்டது.

7வது யாழ். சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடத் தெரிவான இவ் ஆவணப்படம் 11வது அஜென்டா 14 குறுந் திரைப்பட விழாவில் ‘சிறந்த ஆவணப்பட விருது’ பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## கஞ்சா தோட்டம் முற்றுகை 21 கஞ்சா செடிகள் மீட்பு

கனகராசா சரவணன்



வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள தொப்பிக்கல பூலக்காட்டு பிரதேசத்தில் கஞ்சா தோட்டத்தை செவ்வாய்க்கிழமை (14) முற்றுகையிட்ட வாழைச்சேனை பொலிஸார் 21 கஞ்சா செடியுடன் 60 வயதுடைய ஒருவரை கைது செய்துள்ளதாக தெரிவித்தனர்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய் வாழைச்சேனை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸாருடன் இராணுவ புலனாய்வு பிரிவினர் இணைந்து சுற்றிவளைத்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை, வாழைச்சேனை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## தங்கம் கொடுத்த நபருக்கு பாராட்டு



பாறுக் ஷிஹான்

சக பயணியினால் காணாமல் ஆக்கப்பட்ட தங்க சங்கிலியை மீட்டு பொலிஸார் முன்னிலையில் செவ்வாய்க்கிழமை(13) மாலை ஒப்படைத்த நபரை கல்முனை தலைமையக பொலிஸார் பாராட்டியுள்ளனர்.

கல்முனை பேரூந்து நிலையத்தில் இருந்து செவ்வாய்க்கிழமை(13) காலை மட்டக்களப்பு மாவட்டத்தை நோக்கி சென்ற களுவாஞ்சிக்குடி டிப்போவுக்குச் சொந்தமான அரச பேருந்து ஒன்றில் ஒலுவில் பகுதியை சேர்ந்த தாதிய மேற்பார்வை உத்தியோகத்தர் தனது மகளுடன் பயணம் செய்துள்ளார்.

பெரிய கல்லாறு பகுதியில் இருந்து காத்தான்குடி பிரதேச செயலக சமூர்த்தி வங்கியில் கடமையாற்றும் மற்றுமொரு பயணியும் பயணித்துள்ள நிலையில் 2 பவுண் பெறுமதியான தங்க சங்கிலி அவரை அறியாமல் பேரூந்துக்குள் தவறி விழுந்து விட்டது.

## மருந்து கையளிப்பு

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபையினால் மகிழடித்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு சிறுவர்களுக்கான பனடோல் பாணி மருந்து ஒரு தொகை இன்று(13) செவ்வாய்கிழமை வழங்கி வைக்கப்பட்டது.

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர்



ஆலய பரிபாலன சபையின் வண்ணக்குமார்கள் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி வைத்தியர் பி.தக்சனிடம் கையளித்தனர்.

ஆசிரியரின் மோட்டார் சைக்கிளில்

# மோதுண்ட மாணவனுக்கு காயம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஆசிரியர் ஒருவர் பயணித்த மோட்டார் சைக்கிளில் சிக்கி, மாணவனொருவன் காயமடைந்த சம்பவம் ஹட்டனில் 12ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

ஹட்டன் பிரதேசத்திலுள்ள பிரபல பாடசாலையொன்றில் பணிபுரியும் ஆசிரியர் ஒருவரின் மோட்டார் சைக்கிள், அதே பாடசாலையில் ஆரம்பப பிரிவில் கல்வி கற்கும் மாணவன் மீது மோதியதால், காயமடைந்த மாணவன், டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாடசாலை நிறைவடைந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போது, திடீரென வீதியைக் கடந்துள்ளார்.

இதன்போது ஆசிரியரும் கடமை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்ததாகவும், மாணவன் எதிர்பாராத விதமாக வீதியைக் கடந்த போது, இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, ஆசிரியர் ஹட்டன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.



# நுவரெலியாவில் மலர் கண்காட்சி

■ பி.கேதீஸ்

நுவரெலியா மாவட்டத்தில் மலர் வளர்ப்பாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் மலர் விற்பனை கண்காட்சியொன்று நுவரெலியா விக்டோரியா கோல்ஃப் மைதானத்திற்கு அருகாமையில் நடைபெற்றது.

மத்திய மாகாண பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் மற்றும் தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் இணைந்து, ஏற்பாடு செய்திருந்த இக்கண்காட்சியானது, நுவரெலியா மேயர் சந்தனலால் கருணாரத்ன தலைமையில் ஆரம்பிக்கப்பட்டன.

பொருளாதார அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஷிலோமி கிருஷ்ணராஜா, நுவரெலியா மாநகர ஆணையாளர் மற்றும் மேலதிக மாவட்டச் செயலாளர் எஸ். பி. கே. போதிமன்ன, ஹக்கல பூங்காவின் உதவிப் பணிப்பாளர் நிஷாந்தி ஹலுவான, பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.






தேயிலைக் காணிகளின்

# கன்றுகள் நடுவதற்கு எதிர்ப்பு

டெல்மார் தோட்ட மக்கள் பகிஷ்கரிப்பில்

■ ஆ.ரமேஸ்

இராகலை - டெல்மார் மேல்பிரிவு தோட்டத் தொழிலாளர்கள் நேற்று (14) காலை அடையாள பணி பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டனர்.

தோட்ட நிர்வாகம் டெல்மார் மேல்பிரிவு தோட்டத்திற்குரிய தேயிலைக் காணிகளில் " யூக்கலிப்டஸ் "மரக்கன்றுகளை நடுவதற்கு எடுத்த முயற்சியினை கண்டித்தே தொழிலாளர்கள் பணி பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டுள்ளனர்.

டெல்மார் தோட்டத்தை பிரவுஸ் கம்பனி பொறுப்பேற்றதன் பின்னர், பல ஹெக்டேயர் தேயிலைக் காணிகளில் தேயிலை மரங்களுக்கு இடையிலும், ஓரங்களிலும் " யூக்கலிப்டஸ் " மரக் கன்றுகளை நிர்வாகம் நாட்டி வருகிறது.

இந்த நிலையில், எதிர்காலத்தில் தேயிலைக்கு பாரிய பாதிப்பு ஏற்படும் என சுட்டிக்காட்டும் தொழிலாளர்கள், தோட்ட நிர்வாகம் " யூக்கலிப்டஸ் " மரங்கள் ஊடாக பாரிய இலாபத்தை அடைய திட்டமிட்டு தேயிலையை அழிக்க திட்டமிடுகிறது எனவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் தேயிலை நிலங்களில் " யூக்கலிப்டஸ் " மரக்கன்றுகளை நடுவதால், தேயிலைக்கு நீர் பற்றாக்குறை ஏற்பட்டு பின் தேயிலை விளைச்சல் குறைந்து விடும். இதனால் தொழிலாளர்கள் தொழிலை இழக்க நேரிடுவதுடன் தேயிலை மலைகள் காடாகும் எனவும் தெரிவிக்கின்றனர்.

உடப்புஸ்ஸலாவை எனிக் தோட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் " யூக்கலிப்டஸ் " மரக்கன்றுகளை டெல்மார் தோட்ட நிர்வாகம் கொண்டு வந்து நடுவதற்கு தொழிலாளர்கள் நிர்வாகத்தினரால் பணிக்கப்பட்டுள்ள நிலையில், தோட்ட நிர்வாகத்தின் பணிப்பினை நிராகரித்து, கொண்டுவரப்பட்ட மரக்கன்றுகளை மீண்டும் வெளியில் எடுத்து செல்லும்படி வழியுறுத்தி பணி பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.







# மாதிரி வினாத்தாள்கள் வழங்கிவைப்பு

அமரர் லெனின் மதிவானம் அவர்களின் 31 நாள் நினைவாக, “புலமை விடியல்“ அமைப்பினூடாக தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு மாதிரி வினாத்தாள்கள் அதன் தலைவர் ஆர்.பிரகாஷால் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ், பாடசாலையின் பிரதி அதிபர் விஜயசுந்தரம் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

(பி.கேதீஸ்)

கொட்டகலை பிரதேசத்தில்

# சுகாதார தரப்பினருடனான விசேட கலந்துரையாடல்

■ எஸ்.கணேசன்

கொட்டகலை பிரதேச சபையின் தவிசாளர் ராஜமணி பிரசாந்தின் தலைமையின் கீழ், கொட்டகலை பிரதேசசபைக் கட்டடத்தில் சுகாதாரத்துறையுடன் தொடர்புபட்டவர்களுடனான சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

கொட்டகலை பிரதேச சபைப் பிரிவுக்குட்பட்ட தோட்டப்புறங்களின் வைத்திய நிலையங்களை புனரமைத்தல், அவற்றுக்குத் தேவையான அத்தியாவசிய மருந்துப்பொருட்களை பெற்றுக்கொள்ளல், போசாக்கு குறைபாடுடைய பிள்ளைகளுக்கான புரத உணவுத் திட்டம், உணவுப் பாதுகாப்பு போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

இக்கூட்டத்தில்



கொட்டகலை பிரதேச சபையின் செயலாளர் விக்ரமசிங்க, கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் சுதர்ஷன், சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகர் தசநாயக்க, கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் கொட்டகலை பிரதேச சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மார்கழி மாத விசேட பூஜைகள்

■ செ.தி.பெருமாள்

மார்கழி மாதம் 16.12.2022. முதல் தை மாதம் முதலாம் திகதி வரை 16.01.2023 வரை மஸ்கெலியா சண்முக நாதர் ஆலயத்தில் நாளாந்தம் காலை 5.30 மணிக்கு விசேட பூஜைகள் நடைபெற உள்ளன.

02.01.2023 அன்று வைகுண்ட ஏகாதசி பூஜை நடைபெறவுள்ளதுடன், மார்கழி 9 ஆம் திகதி தொடக்கம் 10 நாட்கள் தொடர்ந்து திருவெண்பா பூஜை நடைபெற உள்ளது.

15.01.2023 அன்று தை பொங்கல் விசேட பூஜைகள் நடைபெற்று, சுவாமி நகர் வலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

# சமையல் எரிவாயு விநியோகத்தில் பாரபட்சம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

நான்கு நாட்களின் பின்னர் ஹட்டன் நகரில் லிட்ரோ சமையல் எரிவாயு விநியோகிக்கப்பட்ட நிலையில், விற்பனை பிரதிநிதிகளுக்கும் நுகர்வோருக்கும் இடையில் அமைதியின்மை ஏற்பட்டது.

ஹட்டன் நகருக்கு லிட்ரோ சமையல் எரிவாயு 13ஆம் திகதி இரவு கொண்டு வரப்பட்டதுடன், அன்றைய தினம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான சிலிண்டர்களே விநியோகிக்கப்பட்டதால், இருதரப்புக்குமிடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன.

சமையல் எரிவாயு விற்பனை நிலையங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவு எரிவாயு சிலிண்டர்களே கிடைத்துள்ளதுடன், அவற்றில் ஒரு தொகை ஹோட்டல்களுக்கு ஒதுக்கப்பட்டதால்,



எரிவாயு கொள்வனவுக்காக வரிசைகளில் காத்திருந்த பலர் வெறுங்கையுடன் திரும்பும் நிலை ஏற்பட்டதால் இதன்போது அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

விற்பனை முகவர்கள் ஹோட்டல்களுக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்கும் போது, நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேலதிக தொகையைப் பெறுவதால், சாதாரண நுகர்வோருக்கு சிலிண்டரை விநியோகிக்க பின்வாங்குவதாகவும் நுகர்வோர் குற்றஞ்சுமத்துகின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

# தர்மத்தின் பக்கம் நிற்கவில்லை

■ எஸ்.கணேசன்

எல்லா அதிகாரம் இருந்தாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தர்மத்தின் பக்கம் நிற்கவில்லை. அவர் ஏதேச்சதிகாரமாக செயற்பட்டுவருகின்றார். அவரை உத்தியோகப்பூர்வ ஜனாதிபதியாக நாட்டு மக்கள் ஏற்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கொட்டகலையில் நடைபெற்ற மலையக மக்கள் முன்னணியின் மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் வரிசை யுகம் முடிந்துவிட்டது எனவும், இயல்பு நிலை திரும்பிவிட்டது எனவும் சிலர் கூறுகின்றனர். உண்மை அதுவல்ல, பொருட்களின் விலைகள் எகிறிவிட்டன. மக்களின் கொள்வனவு சக்தி குறைந்துவிட்டது. அதேபோல எரிபொருள் உள்ளிட்டவை மட்டுப்படுத்தப்பட்ட அளவில்தான் வழங்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சட்டக்கல்லூரிக்கு சென்றிருந்தவேளை, அவருக்கு எதிராக கூக்குரல் எழுப்பட்டுள்ளது. இந்நாட்டு மக்கள் அவரை உத்தியோகப்பூர்வ ஜனாதிபதியாக ஏற்கவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது. 134 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் அவர் தெரிவாகி இருந்தாலும், மக்கள் ஆணை இல்லை என்பதை புரிந்துகொள்ள வேண்டும் என்றார்.

என்னதான் அதிகாரம் இருந்தாலும் தர்மத்தின் பக்கம் நிற்பதே சரியான தீர்மானம். ஆனால் ஜனாதிபதி ஏதேச்சதிகாரமாக செயற்பட்டு மக்களை ஒடுக்க முற்படுகின்றார் என்றார்.



# வளி மாசால் யாத்திரிகளின் வருகையில் வீழ்ச்சி

■ சுதத்.எச்.எம்.ஹேவா

கடந்த சில நாட்களாக இலங்கையில் ஏற்பட்டுள்ள வளிமாசால் சிவனொளிபாதமலையை தரிசிக்க வரும் யாத்திரிகர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவனொளிபாதமலை யாத்திரை காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில், அதிகளவான யாத்திரிகர்கள் வருகை தந்ததாகவும், ஆனால் கடந்த



சில நாட்களுக்கு முன்னர் ஏற்பட்ட காற்று மாசு காரணமாக யாத்திரிகர்களின் எண்ணிக்கை சற்று குறைந்துள்ளதாகவும் நல்லத்தண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஈ.ஏ.பி.எஸ். வீரசேகர தெரிவித்துள்ளார்.

சிவனொளிபாதமலை யாத்திரிகளின் பாதுகாப்பிற்காக ஹட்டன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விஜிதாத அல்விஸின் ஆலோசனையின் பேரில், விசேட பாதுகாப்பு திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் இத்திட்டம் 24 மணிநேரமும் செயற்பாட்டில் இருக்கும் என்றார்.

அத்துடன் பல்வேறு போதைப்பொருள்களுடன் சிவனொளிபாதமலையை தரிசிக்க வருபவர்களை கைது செய்ய விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

# தேயிலை தூள் திருடிய பெண்கள் ஐவர் உட்பட அறுவர் கைது

■ ராமு தனராஜா

பசறை, எல்டப் தேயிலை தொழிற்சாலையில் இருந்து தேயிலைத் தூள் திருடியக் குற்றச்சாட்டில் அறுவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதில் ஐந்து பெண்களும் ஆண் ஒருவரும் உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை (13) இரவு நேர கடமை புரிந்த குறித்த ஆறு பேரும் 44 கிலோ கிராம் தேயிலை தூளை தொழிற்சாலையில் இருந்து எடுத்துச் சென்று, தொழிற்சாலை வளாகத்துக்குள் மறைத்து வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தோட்ட நிர்வாகம் பசறை பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பசறை பொலிஸார் தேயிலை தூளை கைப்பற்றியதோடு, சம்பவம் தொடர்பில் அறுவரைக் கைதுசெய்துள்ளனர். திருடப்பட்ட தேயிளைத் தூளின் பெறுமதி, 70,000 ரூபாய் என்றும் சந்தேக நபர்களை பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

# அனுமதியின்றி மணலுடன் பயணித்த லொறி சிக்கியது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

அனுமதிப்பத்திரமின்றி பலாங்கொடையிலிருந்து பொகவந்தலாவைக்கு மணல் ஏற்றிச் சென்ற லொறியொன்று, பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், லொறியின் சாரதியும் நேற்று (14) பொகவந்தலாவை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வளவை ஆற்றில் அகழப்படும் மணல், சந்தேகநபரால் பொகவந்தலாவை பிரதேசத்துக்கு கொண்டு வரப்பட்டு, 1 இலட்சத்து 40ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரும் வாகனமும் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஒப்படைக்கப்படவுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.



# காலநிலை, சூழல் பாதுகாப்புக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம்

சர்வதேச சூழல் மாற்றம் மற்றும் காலநிலை மாற்றம் போன்றவற்றில் பங்களிப்புச் செலுத்தி, சவால்களைத் தோற்றுவிக்கும் நாடுகளுக்கு எதிராக எவ்விதமான சட்டபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை. குறிப்பாக, இவ்வாறானதொரு சூழ்நிலைக்கு இலங்கை கடந்தவாரம் முதல் முகங்கொடுத்துள்ளது.

கொழும்பிலும், நாட்டின் பிரதான நகரங்களையும் பாதித்துள்ள வளி மாசடைதல் தொடர்பான பிரச்சனை தற்போது ஆபத்தான நிலையை நோக்கி நகர்ந்த வண்ணமுள்ளது.

மனித செயற்பாடுகள் மற்றும் இயற்கையான காரணிகளால் தெற்காசிய பிராந்தியத்தைச் சேர்ந்த நாடுகளின் வளி மோசமாக மாசடைந்து காணப்படுகின்றது. தற்போது இந்த நிலை அபாய நிலையை எய்தியுள்ளதுடன், உடனடியாக இதனை சீராக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

பிராந்திய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் காலநிலை மாற்றங்கள் மற்றும் சூழல் மாசுகள் போன்றன இடம்பெற்ற போதிலும், இவற்றினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து நாட்டு மக்களை பாதுகாப்பதற்கு முன்னாயத்த நடவடிக்கைகளை இலங்கை மேற்கொள்ள வேண்டும்.

சிறிய நாடு மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்பதுடன், பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள இலங்கை, இவ்வாறான சூழல்சார் சவால்களால் இலகுவில் பாதிப்படையும் நிலையில் காணப்படுகின்றது.

வெப்பநிலை அதிகரிப்பு, அதீத மழைவீழ்ச்சி மற்றும் கடல் நீர் மட்டம் உயர்வு போன்றன நாட்டின் பெரும்பாலான சகல பொருளாதாரப் பிரிவுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

அதீத மழைவீழ்ச்சியினால் உணவுப் பாதுகாப்புகூட சவாலுக்கு உட்படலாம். நீண்ட கால வரட்சி, திடீர் வெள்ள அனர்த்தம் மற்றும் மண்சரிவுகள் போன்றன மக்களின் வாழ்வாதாரங்களை பாதித்துவிடுகின்றன.

அரசாங்கத்தின் காலநிலை மாற்ற சுபீட்சத் திட்டத்தினூடாக, இந்தப் பிரச்சனைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது. 2010 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட தேசிய காலநிலை மாற்றப் பின்பற்றல் தந்திரோபாயம் மற்றும் 2012 ஆம் ஆண்டில் தேசிய காலநிலை மாற்றக் கொள்கை போன்றன தொடர்பில் பேசப்பட்டிருந்த போதிலும், துரதிர்ஷ்டவசமாக அவை செயற்படுத்தப்படவில்லை.

விவசாயம், கடற்றொழில், நீர், மனித சுகாதாரம், கரையோரம் மற்றும் கடல்சார் உயிரினங்கள், சூழல்கட்டமைப்புகள் மற்றும் உயிரியல் பரம்பல், உட்கட்டமைப்பு மற்றும் மனிதக் குடியேற்றங்கள் போன்றன காலநிலை மாற்றங்களால் மோசமாக பாதிக்கப்படும் பிரிவுகளாக இனங்காணப்பட்டு 2016 ஆம் ஆண்டில் தேசிய பின்பற்றல் கொள்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

கொள்கை வடிவமைப்பு, ஒன்றிணைந்த செயற்பாட்டை வலிமைப்படுத்தல், நிறுவனசார் நிறுவுகையை மேம்படுத்தல் மற்றும் இந்த சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையில் வளங்களை பரம்பலடையச் செய்தல் போன்றவற்றை இலக்காகக் கொண்டு இந்தக் கொள்கை அமைந்திருந்தது.

கடந்த வாரம் இலங்கையில் நடந்தேறிய சம்பவங்களினூடாக, ஆவணங்களுக்கு மாத்திரம் காலநிலைக் கொள்கைகள் மட்டுப்படுத்தப்படக்கூடாது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அவை துரிதமாக செயற்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறான விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி அந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தாமையினால் எழுந்துள்ள இடர்களின் தாக்கங்கள் தற்போது தெளிவாகியுள்ளன.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.


அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# ரணிலின் சுரத்தையற்ற பேச்சினை தமிழ்க் கட்சிகள் கவனமாக கையாள வேண்டும்



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வைக் காண்பது தொடர்பிலான ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது.

வழக்கமாக அரச தரப்பும், தமிழ்த் தரப்புமே இவ்வாறான பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதுண்டு. ஆனால், இம்முறை ஆளுங்கட்சியினர், எதிர்க்கட்சிகள் என்ற பாகுபாடின்றி சர்வகட்சிகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் பேச்சுவார்த்தையாக இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியின் தலைவர்களும், சி.வி.விக்னேஸ்வரனும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் சார்பில் கலந்து கொண்டிருந்தார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பேச்சுக்கான அழைப்பை வழக்கம்போல புறக்கணித்திருந்தது.

சுமார் ஒன்றரை மணி நேரம் இடம்பெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில், வழக்கம் போல, கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்து பேசியது. குறிப்பாக, நல்லாட்சிக் காலத்தில் வரையப்பட்டு நிறைவேற்றப்படாமல்போன புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவதன் மூலம், தமிழ் மக்களுக்கான தீர்வு என்றைக்குமாக உறுதிப்படுத்தப்பட முடியும் என்று சம்பந்தன் எடுத்துக் கூறியிருக்கின்றார்.

அத்தோடு, ஆரம்ப கட்டமாக 13வது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்ப்படுத்தப்பட்டு மாகாண சபைத் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்த் தேசியக் கட்சிகள் மாத்திரமின்றி, டக்ளஸ் தேவானந்தா, மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் போன்றோரும் வலியுறுத்தினர். வடக்கு கிழக்கில் தொடரும் காணி அபகரிப்பு நிறுத்தப்பட்டு, அபகரிக்கப்பட்ட காணிகள் உடனடியாக மீள மக்களிடம் வழங்கப்பட வேண்டும் என்ற விடயம் சம்பந்தன், விக்னேஸ்வரன் போன்றோரால் முன்வைக்கப்பட்டது. அதுவும், எதிர்வரும் ஜனவரி 31ஆம் திகதிக்கும் அவை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த விடயங்களுக்கு அப்பால், பேச்சுவார்த்தையின் சொல்லிக் கொள்ளும்படியான விடயங்கள் எவையும் பேசப்படவில்லை. அல்லது, அதற்கான முனைப்பினை அரச தரப்பினரோ, எதிர்க்கட்சியிலுள்ள சிங்கள பெரும்பான்மைக் கட்சிகளோ வெளிப்படுத்தவில்லை. கிட்டத்தட்ட ஏனோ தானோ என்ற தோரணையில் அவர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். இந்தப் பேச்சுக்கும் தங்களுக்கும் என்ன சம்பந்தம் என்ற நிலையிலேயே அவர்கள் இருந்தார்கள். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பேச்சுவார்த்தையில் பொதுஜன பெரமுனவின் தலைவராக கலந்து கொண்ட போதிலும் அவர் எந்தவித கருத்தையும் வெளியிடவில்லை. அமைதியாக அமர்ந்திருந்துவிட்டு எழுந்து சென்றுவிட்டார். ஒப்பீட்டளவில் இது, தமிழர் பிரச்சினைகளுக்கான ஆரம்ப கட்டம் பேச்சுவார்த்தையாக கொள்ளப்பட்டாலும், அதற்கான அழுத்தமான பதிவுகளைக் காட்டவில்லை என்பது, தமிழ்த் தரப்புக்கள் அவதானத்துடன் ஒவ்வொரு அடியையும் முன்வைக்க வேண்டும் என்கிற எச்சரிக்கையை விடுத்திருக்கின்றது.

> **இராஜதந்திர வெற்றியும் இலகுவாக கனியும். அதுதான், தமிழ் மக்களுக்கான தீர்வை கொண்டுவந்து சேர்க்கும். அதனைச் செய்யாது**

சம்பந்தனுக்கு தன்னுடைய காலத்துக்குள் தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுத்துவிட வேண்டும் என்கிற பெரும் அவா உண்டு. அதற்காகத்தான் நல்லாட்சிக் காலத்தில் பெரும் விட்டுக் கொடுப்புக்களோடு புதிய அரசியலமைப்புக்கான உத்தேச வரைபுக்கு இணங்கினார். பௌத்தத்துக்கு முதலிடம் என்கிற விடயத்தையே விட்டுக் கொடுக்கும் அளவுக்கு சென்றிருந்தார். அவ்வாறான நிலைப்பாட்டுக்கு சம்பந்தன் சென்றமைக்கு தன்னுடைய காலத்துக்குப் பின்னாலும் தன்னுடைய பெயர் நிலைத்திருக்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு காரணமாகும்.

அதாவது, தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுக் கொடுத்த தலைவர் என்கிற அடையாளம் தனக்கானதாக இருக்க வேண்டும் என்பது. ஆனால், அதற்கான வாய்ப்புக்கள் நல்லாட்சிக் காலத்தில் முதல் சில மாதங்களில் கனிந்திருந்தாலும், ராஜபக்ஷக்கள் தென் இலங்கையில் ஆட ஆரம்பித்த இனவாத ஆட்டத்தினால், அது கருகி காணாமற்போனது. இப்போது ராஜபக்ஷக்கள் பல்லுப் பிடுங்கப்பட்ட பாம்புகள் போல வெளியே தோன்றினாலும், அவர்களின் பிடி ஆட்சிக்குள் தளரவில்லை. ராஜபக்ஷக்களைத் தாண்டி நின்று ரணிலால் பெரிய முடிவுகளை எடுக்க முடியாது. அவருக்கு அதிஷ்டவசமாக கிடைத்த ஜனாதிபதி பதவியை காப்பாற்றுவதோடு, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி காண்பதற்கான விடயங்களைக் குறித்து சிந்திப்பதற்குமே நேரம் போதாது. அப்படியிருக்க, சம்பந்தனின் கோரிக்கை என்பது தென் இலங்கையினால் கண்டுகொள்ளப்படுவதற்கான எந்த வாய்ப்பும் இல்லை.

பிரச்சினையை எதிர்கொள்ளும் தரப்பாக தமிழ் மக்களும், அவர்களின் பிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கட்சியினரும் அசமந்தமாக, ஏனோதானோ என்றிருக்கும் தென் இலங்கையை கையாள்வதற்கான உத்திகளை இன்னும் இன்னும் கற்றுத் தேற வேண்டியிருக்கின்றது. இல்லாது விடில், உப்புச்சப்பில்லாத சந்திப்புக்களை சில மணித்தியாலங்கள் நடத்திவிட்டு, தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் பேசிக் கொண்டிருக்கின்றோம் என்று சர்வதேசத்திடம் காட்டி, இராஜதந்திர வெற்றிகளை தென் இலங்கை அடைந்து கொண்டுவிடும். அதுவும், ரணில் மேற்கு நாடுகளின் செல்லப்பிள்ளை. அப்படியான நிலையில், தமிழர் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ரணில் உண்மையில் அர்ப்பணிப்போடு செயற்படுகிறாரா இல்லையான என்பது தொடர்பிலான உண்மையை சர்வதேசத்திடம் தெளிவுபடுத்தி தமிழர் தரப்பில் நிலையை இராஜதந்திர ரீதியில் வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையென்றால், கடந்த காலங்களில் தமிழர் தரப்போடு பேச்சு நடத்துவதாக கூறிக் கொண்டு தமிழ்த் தரப்புக்களை உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் வலுவிழக்கப் பண்ணும் உத்திகளையே தென் இலங்கை செய்து வந்திருக்கின்றது. குறிப்பாக, புலிகளின் அழிவு அப்படியான புள்ளியில் இருந்தே ஆரம்பித்தது. அப்படியான நிலையில், தென் இலங்கையின் அறமற்ற செயற்பாட்டை வெளிப்படுத்துவது என்பது தவிர்க்க முடியாதது.

அத்தோடு, இவ்வாறான பேச்சுவார்த்தை மேசையை திறந்துவிட்டு,தமிழர் தரப்பின் அரசியல் பலத்தினை பிரித்தாளும் கட்டங்களை ரணில் அரசாங்கம் திறக்கும். அதற்குள் சிக்கிக் கொள்ளாது இருப்பது என்பது ஒவ்வொரு தமிழ்த் தேசியக் கட்சியினதும் கடப்பாடாக இருக்க வேண்டும். ஏனெனில், ரணில் ஜனாதிபதியாக வருவதற்கான பாராளுமன்ற வாக்கெடுப்பின் போதே கூட்டமைப்பின் பத்து பாராளுமன்ற உறுப்பினர்களில் கிட்டத்தட்ட பாதி அளவானோரை விலைக்கு வாங்கியதான குற்றச்சாட்டுக்கள் உண்டு. அதனை, கூட்டமைப்பினருடனான சந்திப்பொன்றின் போது, ரணிலே வெளிப்படையாக பேசியும் இருக்கின்றார். அதனால், கூட்டமைப்பின் இருப்பு, அதன் தேவை தொடர்பில் உணர்ந்து கொண்டிருப்பவர்கள், ரணில் விரிக்கும் வலையில் விழாது விடயங்களை கையாள முயல வேண்டும். அதற்கான ரணிலோடோ தென் இலங்கையின் தரப்புக்களோடோ பேச்சுவார்த்தை நடத்தாமல் ஒதுங்கிக் கொள்ள வேண்டும் என்று இந்தப் பத்தியாளர் கூறவில்லை.

> **வடக்கு கிழக்கில் தொடரும் காணி அபகரிப்பு நிறுத்தப்பட்டு, அபகரிக்கப்பட்ட காணிகள் உடனடியாக மீள மக்களிடம் வழங்கப்பட வேண்டும்**

மாறாக, தமிழ்த் தேசியக் கட்சிகள் தென் இலங்கையின் ஆட்சியாளர்களை பேச்சுவார்த்தைக்கு தவிர்க்க முடியாத சூழ்நிலைகளை ஏற்படுத்தியாவது கொண்டுவர வேண்டும். அதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதில் தவறில்லை. பேச்சுவார்த்தையின் கண்காணிப்புத் தரப்பாக மூன்றாது நாடொன்றின் பங்களிப்பைக்கூட கோரலாம். இதனையெல்லாம் செய்வதற்கான எத்தனம் என்பது, பத்திரிகைச் சந்திப்புக்களை நடத்துவதாலோ, அறிக்கை வெளியிடுவதாலோ மாத்திரம் நிகழ்ந்துவிடாது. அதற்காக பணம் பதவிகளுக்கும் சூழ்ச்சிகளுக்குள்ளும் வீழாத மனநிலையில் நின்று அரசியல் செய்வதற்கான திடசங்கற்பத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். அந்தத் திடசங்கற்பம், சிதைத்து போய்க் கொண்டிருக்கின்ற கூட்டமைப்பையும் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளையும் பலப்படுத்தும். அது, சீரான நேரான தமிழ்த் தேசிய அரசியலை செய்வதற்கான சாத்தியத்தை உருவாக்கும். அப்படியான சூழல் உருவானாலே, செயற்பாட்டு அணுகுமறையும் இராஜதந்திர வெற்றியும் இலகுவாக கனியும். அதுதான், தமிழ் மக்களுக்கான தீர்வை கொண்டுவந்து சேர்க்கும். அதனைச் செய்யாது, போலியான பேச்சுவார்த்தை மேசைகளில் அமர்வதால் யாருக்கும் எந்தப் பயனும் இல்லை. காலம் மாத்திரமே கடத்தப்படும்.



## வாழ்வியல் தரிசனம்

நம்பிக்கைகளைப் பாதுகாத்து, மனஉறுதியுடன் அழியாமல் வைத்திருங்கள். நல்லவைகளை நெஞ்சத்தில் இருத்தி, உரமேற்றுங்கள்.

முன்னேறும் பாதையில் நீங்களே உங்களை வழிநடத்திச் செல்லுங்கள். கண்டவர் பேச்சுகளை நம்ப வேண்டிய அவசியமில்லை. கேட்க வேண்டிய பெரியோரிடமே கேட்டு அறியவேண்டும். போராட்டமான வாழ்க்கை இதுவெனக் கலங்குதல் கூடாது.

எதிழர்மறைக் கருத்துகளை சிலர் அள்ளி வீசுவார்கள். கண்டுகொள்ள வேண்டாம். எங்களுக்குள் முடிவு எடுக்கும் திறமை உண்டு. எங்களால் உருவாக்கும் திறமை மிகு கருமங்களை பிறர் தடுக்க முடியாது.

உங்களை நீங்களே நிர்வகித்துக் கொள்க. நீங்களே உங்களை ஆள்பவராவீர்கள். உங்களது செயல்களும் உங்களுக்கெயானது.

எந்த நற்றெயல்களையும் செய்திட கடவுள் ஆசீகள் உண்டு. உங்களுக்குள் பிரவாகிக்கின்ற மகிழ்ச்சி நிலையே, உங்களக்குள் ஒளியூட்டும்.

தற்செயலான இடையூறுகள் சாதாரணமானவை; நிரந்தரமானவை அல்ல. புரிந்து கொள்ளுங்கள் - உருவாக்குபவன் படைப்பாளி.

பல கருமங்களை உங்கள் மூலம் ஒழுங்காகச் செய்ய இறைவன் ஆணையிட்டுள்ளான். தொடர்ந்து கருமம் ஆற்றுங்கள்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வவுனிக்குளத்திற்கு போதியளவு நீர் வரவில்லை



முல்லைத்தீவு வவுனிக்குளத்திற்கு போதியளவு நீர் வரவில்லை என விவசாயிகளினால் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முக்கிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றாக வவுனிக்குளம் காணப்படுகின்றது. 26 அடி முழுமையான நீர் மட்டத்தினை கொண்ட இக்குளத்தில் தற்போது 14 அடி நீர் மட்டமே காணப்படுகின்றது.

பாலியாறு மூலம் இக்குளம் நிரம்புவது வழமை. மழை வீழ்ச்சி காரணமாக பாலியாறு மூலம் இக்குளத்திற்கு நீர் வரவு குறைவாக காணப்பட்டுள்ளது.

இக்காலத்தில் 20 அடி வரையான நீர் மட்டம் காணப்படும். 6,200 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பிற்கு நீர்ப்பாசனம் மேற்கொள்ள முடியும். தற்போது இக்குளத்தில் இருந்து ஒரு தடவை மட்டும் நீர்ப்பாசனம் இடம் பெற்றுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குளத்தின் நீர் வரவு அதிகரிக்கப்படுவதன் மூலமே காலபோக நெற்செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதேவேளை வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவில் உள்ள 12 குளங்களில் 05 குளங்கள் வான் பாய்கின்றன.

நடராசா கிருஸ்ணகுமார்

திருவல்லிக்கேணி

# அமைச்சரானார் உதயநிதி ஸ்டாலின்



தமிழ் நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அமைச்சரவையில் 35-வது அமைச்சராக நேற்று முன்தினம் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி எம்.எல்.ஏ. உதயநிதி ஸ்டாலின் பதவியேற்றுக்கொண்டார்.

இந்நிலையில், புதிதாக பதவியேற்றுள்ள உதயநிதி ஸ்டாலினுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் மெய்யநாதனிடம் கூடுதலாக இருந்த விளையாட்டுத்துறையே உதயநிதி ஸ்டாலினுக்கு ஒதுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உத்திர பிரதேசம்



## புகைப்படத்தால் கலவரம்

உத்திரபிரதேசம், டியோரியா மாவட்டத்தில் கடந்த 8 ஆம் திகதி திருமண வைபவமொன்று நடைபெற்றுள்ளது.

இத்திருமணத்தில் ஏராளமானோர் கலந்து கொண்டிருந்த நிலையில் மணமக்களுடன் யார் முதலில் புகைப்படம் எடுத்துக்கொள்வது ? என்பதில் பெண் வீட்டாருக்கும், மாப்பிள்ளை வீட்டாருக்கும் ஏற்பட்ட வாக்குவாதம் மோதலில் முடிந்துள்ளது.

இச்சம்பவத்தின் போது மாப்பிள்ளை வீட்டார் மது அருந்தியிருந்ததாகவும் கூறப்படுகிறது.


இந்நிலையில் இம்மோதலில் மாப்பிள்ளையின் தங்கை மற்றும் உறவினர்கள் சிலருக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த ராம்பூர் பொலிஸார் இருவீட்டாரையும் சமாதானம் செய்து வைத்ததோடு, காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதனால் கோபமடைந்த மணமகன், முதலில் திருமணம் வேண்டாம் எனக் கூறியுள்ள நிலையில், பின்னர் மனம் மாறி திருமணம் செய்துகொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

## அமெரிக்காவில் தமிழ்ப் பெண் சாதனை



அண்மையில் இடம்பெற்ற ` மிஸஸ் இன்டர்நேஷனல் வேர்ல்ட் கிளாசிக்' அழகி போட்டியில், தமிழகத்தை சேர்ந்த 'பிளாரன்ஸ் ஹெலன் நளினி' வெற்றி வாகை சூடியிருந்தார்.

சுமார் 3000 பேர் வரை கலந்து கொண்ட இப் போட்டியில், 52 பேர் மாத்திரமே இறுதிப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தனர் என்பதும், அதில் நளினி மாத்திரமே தமிழகத்தைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து மும்பையில் நடைபெற்ற இறுதி போட்டியில் நளினி 2021-ஆம் ஆண்டுக்கான "மிசஸ் இன்டர்நேஷனல் வேர்ல்ட் கிளாசிக்" என்ற பட்டத்தையும், "கிளாமர் அச்சீவர்" என்ற துணைப் பிரிவு பட்டத்தையும் வென்று சாதனை படைத்தார்.

இந்நிலையில் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள மியாமி நகரில் அண்மையில் நடைபெற்ற 'மிஸ் உலக அழகி போட்டியில் கலந்துகொண்ட அவர் 'Ms. International World People's Choice Winner 2022' என்ற பட்டத்தையும் வென்று சாதனை படைத்துள்ளார். '40-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 14 வயது முதல் 60 வயது வரையிலான அழகிகள் இப்போட்டியில் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கேரளா



## 99 வயதில் ஐயப்பர் தரிசனம்

99 வயதான மூதாட்டி யொருவர், ஐயப்பரைத் தரிசனம் செய்ய சபரி மலைக்கு வந்த சம்வம் பக்தர்கள் மத்தியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கேரளா மாநிலம் கண்ணூர் மாவட்டம் இருட்டி பகுதியை சேர்ந்த தேவு என்ற மூதாட்டியே நேற்று முன்தினம்(13) தனது உறவினர்களின் உதவியுடன் சபரிமலைக்கு தரிசனம் செய்ய வந்துள்ளார்.

அவர் தொடர்ந்து 26ஆவது ஆண்டாக சபரிமலைக்கு வருகை வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த மூதாட்டியின் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கர்நாடகா

## "மோசடி செய்வதில் PhD முடித்துள்ளேன்"

### அமைச்சரின் கருத்தால் சர்ச்சை



கர்நாடகாவில், 'பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் 'பி.ஸ்ரீராமுலு ' "மோசடி செய்வதில் நான் PhD பட்டம் பெற்றுள்ளேன்" எனத் தெரிவித்திருந்தமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த அவர் பெல்லாரி மாவட்டத்தில், உள்ள ஒரு பாடசாலை நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.


இதன்போது " ஒவ்வொரு நாளும் வகுப்பறையில் மாணவர்கள் முன்னிலை தான் அவமானப் படுத்தப்படுவதாகவும், ஒருநாள் தான் 10 ஆம் வகுப்புப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றபோது , தனது ஆசிரியர் ஆச்சரியமடைந்து என்னிடம் எப்படி தேர்ச்சி பெற்றாய் எனக் கேட்டார்? எனவும், அதற்குப் பார்த்து எழுதியே தேர்ச்சி அடைந்தே எனப் பதிலளித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்வாறான மோசடி செய்வதில் தான் PhD முடித்தவர் என்றும் பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அவர் தெரிவித்த கருத்தானது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருச்சி

## 1,000 விளக்குகளால் பிரகாசிக்கும் ராஜகோபுரம்



108 வைணவ தலங்களில் முதன்மையானதும், பூலோக வைகுண்டம் என போற்றப்படும் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோவிலில் அண்மையில் சகஸ்ரதீப வைபவம் நடைபெற்றது.

கார்த்திகை மாதத்தில் நடைபெறும் இவ் வழிபாட்டில் பக்தர்கள் ஆயிரக்கணக்கான விளக்குகள் ஏற்றி இறைவனை வணங்கினால் மிகுந்த நற்பலன்களை கொடுக்கும் என்பது ஐதீகம்.

அந்த வகையில் நேற்று முன்தினம் பக்தர்களால் ஆயிரத்திற்கு மேற்பட்ட விளக்குகளை அடுக்கி ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் மாதிரி உருவாக்கப்பட்டது.

விளக்குகளோடு மட்டும் இல்லாமல் பூக்களை கொண்டும் அலங்காரம் செய்யப்பட்டது.

இக்காட்சியைக் காண்பதற்காகவே பக்தர்கள் வெகு தொலைவில் இருந்து வருகை தந்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# "BOC விருது"

யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட மாணவர்களுக்கு "BOC விருது" என்ற நாமத்தில் தங்கபதக்கம் ஒன்றினை வழங்க உத்தியோக பூர்வ புரிந்துணர்வு உடன்படிக்கையில் இலங்கை வங்கி இணைகின்றது.

மனித நாகரீகத்தின் தோற்றம் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளும்போது அதன் ஓர் அங்கமாக வணிகமும், வணிகம் சார் நிறுவனங்களின் வளர்ச்சியினையும் நோக்க வேண்டிய தேவைப்பாடுள்ளது.

அதே வேளை "திரைகடல் ஓடி திரண்டதொரு திரவியம் தேடு" என்கின்ற சித்தாந்தத்துக்கு ஏற்ப வரலாறு, பண்பாடு, நாகரீகம் போன்றவற்றினை ஆய்வுக்கு உட்படுத்திய போது, வணிகத்தினதும் வணிக நிறுவனங்களினதும் முக்கியத்துவங்கள் அறிந்து கொள்ளபட்டதுடன், இதன்வாயிலாக மானிட சமுதாயம் பல்லாயிராம் ஆண்டுகளுக்கு முன்னரே வணிகம் மற்றும் வங்கியல் போன்றனவற்றில் சிறந்து விளங்கினர் என்பதற்கு பண்டைய தமிழ் இலக்கியங்களில் பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம், புறநானூறு, திருக்குறள் பேன்றனவற்றில் அலசப்பட்ட வணிகம் பற்றிய கருத்துகள் ஒரு சான்றாகும் .

ஆரம்ப காலங்களில் குறிப்பாக கிரீஸ் (Greece)> ரோம் (Rome), எகிப்து (Egypt), பாபிலோனியா (Babylon) நாகரீகங்களில் வங்கிகளாக மதத்தலங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஏனெனில் மத தலங்கள் பணங்களினை சேமித்து வைப்பதற்கான இடமாக இருந்தன.

'யாதும் ஊரே யாவரும் கேளிர் தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்கின்ற உயர்ந்த சிந்தனை ஓட்டத்தின் வாயிலாக மானிட சமுதாயத்தின் வாழ்வியல் முன்னேற்றத்துக்கான ஓர் கலங்கரை விளக்காக விளங்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' வலுவல காலவரையினாலே என்று பவுணந்தியாரால் நன்நூலில் கூறப்பட்டது போல் புதியவைகள் புகுத்தி வெற்றிகள் பலகண்டு புதுப்பொலிவுடன் மிக வேகமாக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடமானது வளர்ச்சி பாதையில் முதன்மையானதும் தனித்துவம் வாய்ந்ததுமாகப் பயணிக்கின்றது.

இப்பீடமானது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் காணப்படுகின்ற புகழ் பூத்த கல்வி நிறுவனங்களுடனும் தொழில்முறை சார் அமைப்புகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையினை ஏற்படுத்தி தொடர்ச்சியாக இணைந்து பயணிப்பதன் மூலமாக மாணவர்களும்இ பீட அங்கத்தவர்களும் பல்வேறு வகையான நன்மையினை அனுபவிக்கின்றனா.; அதன் ஓர் நீட்ச்சியாக இலங்கை வங்கியுடனும் ஓர் உடன்படிக்கையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம் இணைந்து கொள்வது இருசாராருக்கும் பெருமைமிகு தருணமாக அமைகின்றது.





1939ஆம் ஆண்டு சேர் ஆன்ட்ரூ கால் டெகாட் (Sri AndrewCaldecott) என்ற ஆங்கிலேய ஆளுனரினால் சம்பிரதாய பூர்வமாக கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள நகர அலுவலக வளாகத்தில் திறந்து வைக்கப்பட்ட இலங்கை வங்கியானது (Bank of Ceylon) இலங்கையில் காணப்படுகின்ற 24 உரிமம் பெற்ற வணிகவங்கிகளில் முதன்மையான வங்கியாக தேசத்தின் வங்கியாளர் ; (Bankers to the Nation) என்கின்ற மகுட வாசகத்துடன் தொழில்பட்டு இன்றும் சிறப்பாக வெற்றி நடைபோடுகின்றது.

இலங்கை வங்கியானது இலங்கையின் முன்னணி வர்த்தக, மற்றும் அரசாங்க வங்கி என்கின்ற வகையில் நிலைபேண் நிதியளிப்பு (Sustainable Financing) பரோபகாரம், மற்றும் சமூக முதலீடுகள் வழியாக குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்கின்றது. அதே வேளையில் அனைத்து பங்குதாரர்களின் நலனுக்காக ஆரோக்கியமான வணிகத்தை உருவாக்குகின்றது.

இவ்வங்கியின் தூரநோக்கு (Vision) மற்றும் பணிக்கூற்று (Mission) என்பவற்றின் பிரகாரம் வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு, புதிய வகையான நிதி தீர்வுகளினை வழங்கி வலுவான வங்கியாக செயற்படுவதுடன். பல்வேறு வகையான சமூக பொறுப்புக்கள் (Social responsibility) சார்ந்த வேலைத்திட்டங்களினை நடைமுறைப்படுத்தி வருகின்றன. குறிப்பாக எதிர்கால தலைமுறையின் ஒளிமயமான எதிர்காலத்தினை உருவாக்கி கொள்ள கல்வி செயற்பாடுகளில் பல்வேறு வகையான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது இந்தவகையில் இலங்கை வங்கியானது யாழ் பல்கலைக்கழகத்தில் பல்வேறு வகையான வேலைத்திட்டங்களினை தேசத்தின் வங்கியாளன் என்ற முறையில் செய்தாலும். முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தில் காணப்படுகின்ற மாணவர்களின் நலன் கருதி, அதாவது அவர்களினை எதிர்காலத்தில் சுபீட்சம் உடைய தலைவர்களாக உருவாக்கி கொள்ளும் வகையில் மாணவர்களினை ஊக்குவிக்கும் நோக்கில் மாணவர்களுக்கு ஒரு புலமை பரிசில் திட்டத்தினை வழங்க உத்தியோக பூர்வ புரிந்துணர்வு உடன்படிக்கையில் மார்கழி மாதம் 15 ஆம் திகதி வியாழக்கிழமை கைச்சாத்து இடுவதன் மூலமாக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடமும் இலங்கை வங்கியும் சட்ட ரீதியாக இணைகின்றது.




இவ் உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கை வங்கியானது 1,00,000 ரூபாவினை இலங்கை வங்கி திருநெல்வேலி கிளையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பெயரில் வைப்பிலிட்டு அதிலிருந்து வரும் வட்டிக்கு ஒவ்வொரு ஆண்டும் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தினால் வழங்கப்படும் இரண்டு பிரதான பட்டப்படிப்புகளில் (Bachelor of Business Administration Honours Degree, Bachelor of Commerce Honours Degree) சிறந்து விளங்கும். தலா ஒரு மாணவனுக்கு "BOC tpUJ" என்ற நாமத்தில் தங்கபதக்கம் ஒன்றினை வழங்கிக் கௌரவிக்கவுள்ளது.

உண்மையில் இவ் விருதானது மாணவர்கள் கல்வி செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு மிக முக்கியமான உந்துசக்தியாகக் காணப்பாடும். திருக்குறளில் வள்ளுவரின் கூற்றின்பிரகாரம்

**'வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனைய துயர்வு'**

மக்களுக்கான ஊக்கத்தின் அளவே அவர்களுடைய வாழ்க்கையின் உயர்வாக இருக்கும். எனவே சரியான நேரத்தில் திறமையினை கௌரவிப்பதன் மூலம் சிறந்த மானிட சமுதாயத்தினை உருவாக்கி கொள்ள வழிவகுக்கும் என்பதனைப் புரிந்ததன் விளைவால் உருவானதே இவ் உடன்படிக்கையாகும். ஏற்கனவே முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம் சிறந்த மாணவர்களினை இனம் கண்டு விருதுகளையும் மற்றும் புலமை பரிசில்களினை வழங்கி மாணவர்களினை ஊக்கப்படுத்துவதுடன் மாணவர்களிடையே சகிப்புத்தன்மையையும் மற்றும் சகபாடிகளுக்கு இடையேயான சயோத்தியையும் உருவாக்கும்.

■ நிதர்ஷன் வினோத்



உலகக் கிண்ணம்: குரோஷியாவை வீழ்த்தி

# இறுதிப் போட்டியில் ஆர்ஜென்டினா

கட்டாரில் நடைபெற்று வரும் கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு ஆர்ஜென்டினா தகுதி பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை நடைபெற்ற குரோஷியாவுடனான அரையிறுதிப் போட்டியில் வென்றே ஆறாவது முறையாக இறுதிப் போட்டிக்கு ஆர்ஜென்டினா தகுதி பெற்றுள்ளது.

குரோஷியாவின் கோல் காப்பாளர் டொமினிக் லிவகோவிச்சால் ஆர்ஜென்டினாவின் முன்களவீரர் ஜூலியன் அல்வரேஸ் வீழ்த்தப்பட வழங்கப்பட்ட பெனால்டியை போட்டியின் 34ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்டினாவின் அணித்தலைவர் லியனல் மெஸ்ஸி கோலாக்க அவ்வணி முன்னிலை பெற்றது.

இதற்கடுத்த ஐந்தாவது நிமிடத்தில் ஆர்ஜென்டினாவின் முன்களவீரரான மெஸ்ஸி வழங்கிய பந்தை பெற்றுக் கொண்டு தனித்து 50 மீற்றர் முன்னேறிய அல்வரேஸ் பெற்ற கோல் மூலம் முன்னிலையை ஆர்ஜென்டினா இரட்டிப்பாக்கியது.

இந்நிலையில் முதற்பாதி முடிவில் ஆர்ஜென்டினாவின் மத்தியகளவீரர் அலெக்ஸிஸ் மல் அலிஸ்டர் தலையால் முட்டிய பந்தை லிவகோவிச் தடுத்திருந்த நிலையில் முதற்பாதி முடிவில் 2-0 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்டினா முன்னிலையிலிருந்தது.

பின்னர் குரோஷியாவின் பின்களவீரர் ஜொஸ்கோ கவிராலைத் தாண்டு அல்வரேஸிடம் மெஸ்ஸி கொடுத்த பந்தை அவர் கோலாக்க, 69ஆவது நிமிடத்தில் 3-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்ற ஆர்ஜென்டினா, போட்டி முடிவிலும் இக்கணக்கோடு வெற்றி பெற்றது.

பிரேஸிலுடனான காலிறுதிப் போட்டி போன்று பெரும்பாலான நேரங்களில் குரோஷியாவே பந்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோதும், ஒரே ஒரு உதையை மாத்திரமே கோல் கம்பத்தை நோக்கி குரோஷியா செலுத்தியிருந்தது.

எல்.பி.எல்:

## கோல் கிளாடியேட்டர்ஸை வென்ற கொழும்பு ஸ்டார்ஸ்

லங்கா பிறீமியர் லீக்கில் (எல்.பி.எல்), பல்லேகலவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கோல் கிளாடியேட்டர்ஸுடனான போட்டியில் கொழும்பு ஸ்டார்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஸ்டார்ஸின் அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிளாடியேட்டர்ஸ், அணித்தலைவர் குசல் மென்டிஸின் 72 (49), அசாட் ஷஃபிக்கின் 58 (33), தனுக டப்ரேயின் 33 (22), லஹிரு உதாரவின் 24 (14) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், சீக்குகே பிரசனால் 3-0-22-1, கசுன் ராஜித 4-0-32-1, நவீன்-உல்-ஹக் 4-0-33-2 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 194 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்டார்ஸ், தினேஷ் சந்திமாலின் 63 (33), சரித் அஸலங்கவின் 46 (38), ரவி பொப்பாராவின் ஆட்டமிழக்காத 31 (12), பெனி ஹொவெல்லின் 22 (09), பிரசன்னாவின் 14 (06) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக பொப்பாரா தெரிவானார்.

இதேவேளை, முன்னதாக நடைபெற்ற தம்புள்ள ஓறாவுடனான போட்டியில் கண்டி பல்கொன்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: கண்டி பல்கொன்ஸ்

கண்டி பல்கொன்ஸ்: 193/3 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: கமிந்து மென்டிஸ் 58 (40), அஷேன் பண்டார ஆ.இ 42 (22), அன்ட்ரே பிளட்சர் 44 (31), பதும் நிஸங்க 26 (20), நஜிபுல்லாஹ் ஸட்ரான் ஆ.இ 16 (08) ஓட்டங்கள். பந்துவீச்சு: நூர் அஹ்மட் 0/26 [4])

தம்புள்ள ஓறா: 116/10 (14.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: சத்துரங்க டி சில்வா 25 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: கார்லோஸ் பிறத்வெய்ட் 3/25 [3], சமிந்து விஜேசிங்க 3/25 [3], பேபியன் அலென் 2/5 [1.2], சாமிக கருணாரத்ன 2/11 [2])

போட்டியின் நாயகன்: கமிந்து மென்டிஸ்





சிநேகபூர்வ போட்டியில்

## ஏ.சி மிலனை வென்ற ஆர்சனல்

ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஏ.சி மிலனுடனான சிநேகபூர்வப் போட்டியில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான ஆர்சனல் வென்றது.

இப்போட்டியின் 21ஆவது நிமிடத்தில் ஆர்சனலின் அணித்தலைவரான மார்டின் ஒடெகார்ட் பிறீ கிக் மூலம் பெற்ற கோலின் மூலம் முன்னிலை பெற்ற அவ்வணி, 41ஆவது நிமிடத்தில் முன்களவீரரான றீஸ் நீல்சனின் உதையானது மத்தியகளவீரரான ஒடெக்கார்ட்டில் பட்டுக் கோலானதோடு தமது முன்னிலையை இரட்டிப்பாக்கியது.

பின்னர் 78ஆவது நிமிடத்தில் மிலனின் பின்களவீரரான பிகாயோ டொமோரி கோலொன்றைப் பெற்றபோதும் இறுதியில் 2-1 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றது.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி ஆசிரியர்கள்

## கிரிக்கெட் அணியின் மேலங்கி அறிமுக நிகழ்வு

எம்.என்.எம். அப்ராஸ்

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) ஆசிரியர்கள் கிரிக்கெட் அணியின் உத்தியோகபூர்வ மேலங்கி அறிமுக நிகழ்வானது பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.



கட்டார்

# கட்டாரிடம் கை நீட்டியதால் கைது

கட்டாரில் வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் நடைபெறுவதாகவும், இவ்விவகாரத்தில் ஐரோப்பிய கூட்டமைப்பு தங்களுக்கு ஆதரவான அரசில் முடிவுகளை எடுப்பதற்கு கட்டார் பணபலத்தை பயன்படுத்தி வருவதாகவும் நீண்ட காலமாகவே குற்றச்சாட்டுகள் எழுந்து வந்தன.

ஆனால் இதனை கட்டார் அரசு திட்டவட்டமாக மறுத்து வந்தது. இந்நிலையில் கட்டாரிடம் லஞ்சம் பெற்றதாக கூறி ஐரோப்பிய பாராளுமன்றத்தின் பெண் தலைவரான எவா காயிலி உட்பட 4 பேரை கைது செய்துள்ள பொலிஸார் அவர்கள் மீது சட்டவிரோத பண பரிவர்த்தனை வழக்கு பதிவு செய்துள்ளனர்.




மேலும் இது தொடர்பாக ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வீடு உட்பட 16 இடங்களில் பொலிஸார் சோதனை நடத்தி சுமார் 6 லட்சம் யுரோக்களைப் பறிமுதல் செய்தனர்.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் பெல்ஜியம் தலைநகர் பிரசல்சில் உள்ள ஐரோப்பிய நாடாளுமன்ற அலுவலகங்களில் பொலிஸார் சோதனை நடத்தினர்.

இதனிடைய லஞ்ச வழக்கில் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து கிரீஸ் நாட்டை சேர்ந்த எவா காயிலி ஐரோப்பிய நாடாளுமன்ற துணைத்தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நியூசிலாந்து



## புகை பிடிப்பதற்கு வாழ்நாள் தடை

2025ஆம் ஆண்டுக்குள் நியூசிலாந்தை புகை பிடித்தல் அற்ற நாடாக மாற்ற வேண்டும் என்ற இலக்கை அந்நாட்டு அரசு கொண்டுள்ளது.

அதன் அடிப்படையில் மக்களிடம் புகை பிடிக்கும் பழக்கத்தைக் குறைக்க பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

இந் நிலையில் நியூசிலாந்தில் இளைஞர்கள் சிகரெட் வாங்குவதற்கு வாழ்நாள்தடை விதிக்கும் புதிய சட்டத்தை அந்த நாட்டு அரசு நேற்றுமுன்தினம் நிறைவேற்றியது.

இச்சட்டத்தின் படி 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி அன்று அல்லது அதற்குப் பின்னர் பிறந்தவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்வது தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சிகரெட் வாங்குவதற்கான குறைந்தபட்ச வயது தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே செல்லும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, நியூசிலாந்தில் அடுத்த 50 ஆண்டுகளுக்கு பிறகு சிகரெட் வாங்குவதற்கான குறைந்தபட்ச வயது 63 ஆக இருக்கும் என சட்ட நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஆனால் அதற்கு முன்பாகவே புகைபிடிக்கும் பழக்கம் மறைந்துவிடும் என்று சுகாதார அதிகாரிகள் நம்புகின்றனர்.

இப்புதிய சட்டம் நாட்டில் புகையிலை விற்க அனுமதிக்கப்படும் சில்லறை விற்பனையாளர்களின் எண்ணிக்கையை சுமார் 6,000ல் இருந்து 600 ஆக குறைக்கிறது.

மேலும் புகையிலையில் அனுமதிக்கப்பட்ட நிகோடின் அளவை குறைக்கவும் வழிவகை செய்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கனடா

## வாடகை வீட்டில் வசிப்பவர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

கனடாவில் வாடகை வீட்டில் வசித்து வரும் குறைந்த வருவாய் கொண்டவர்களுக்கு, அந்நாட்டு அரசு 50 டொலர்கள் உதவித்தொகையாக வழங்கவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அந்தவகையில் உதவித்தொகையைப் பெற விரும்புபவர்கள் குறைந்தபட்சம் 15 வயது உடையவர்களாகவும், 2022 -ஆம் வருடத்தில் தங்கள் 2021 -ஆம் ஆண்டு வருவாயில் 30 சதவீதத்தையாவது வாடகையாகச் செலுத்தி இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாமல் 35,000 டொலர்கள் அல்லது அதற்கு குறைவான வருவாய் கொண்ட குடும்பங்களாகவோஅல்லது 20,000 டொலர்கள் அல்லது அதற்கு குறைவான வருவாய் கொண்ட தனிநபராகவோ இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2021 -ஆம் வருடத்திற்கான வருமான வரி தாக்கல் செய்திருக்க வேண்டும் எனவும், இதற்கு தகுதியுடையவர்கள் பெடரல் அரசின் இணையதளம் வாயிலாக விண்ணப்பித்துக் கொள்ளலாம் எனவும் தாம் வாடகை செலுத்துவதற்கான ஆதாரத்தையும் அதனுடன் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தாய்வான்

## தாய்வான் எல்லையில் போர் பதற்றம்

தாய்வானில் கடந்த 2016 -ஆம் ஆண்டு ஜனாதிபதியான சாய்இங் வென் தெரிவு செய்யப்பட்டதில் இருந்து சீனா -தாய்வான் இடையேயான உறவில் விரிசல் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

குறிப்பாக சாய்இங் -வென் தாய் வானை சுதந்திர சுயாட்சி நாடாக அறிவித்தமையை அடுத்து சீனாவுக்கும் தாய்வானுக்கும் இடையேயான மோதல் போக்கு மேலும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் கடந்த செப்டம்பர் மாதம் முதல் தைவான் -சீனா இடையே காணப்படும் மோதல் போக்கானது தற்போது போர் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், இதனால் தாய்வான் மக்கள் மிகுந்த அச்சத்தில் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில் நேற்று முன்தினம்(13) சீனா சுமார் 18 அணு ஆயுத H-6 ரக விமானங்களை தாய்வானின் பாதுகாப்பு எல்லைக்குள் அத்துமீறி அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான்

## குழந்தை பெற்றால் 13 லட்சம் ரூபாய் பரிசு

உலக நாடுகள் பலவற்றில் அண்மைக்காலமாக குழந்தைகள் பிறப்பு விகிதம் குறைவடைந்து கொண்டே செல்வதால் பல நாடுகள் புதுப்புது அறிவிப்புக்களை வெளியிட்டு வருகின்றன.

அந்தவகையில் குழந்தைகள் பிறப்பு விகிதத்தை அதிகரிக்க ஜப்பான் அரசு புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி குழந்தை பெற்றுக்கொள்ள விரும்பும் தம்பதிகளை ஊக்குவிக்கும் விதமாக பிரசவம் மற்றும் குழந்தை பராமரிப்பு செலவாக இலங்கை மதிப்பில் சுமார் 13 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய திட்டமானது வரும் 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அமுலுக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொங்கோ

## 120 பேரின் உயிரைப் பறித்த நிலச்சரிவு

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் தலைநகரான கின்ஷாசாவில் கடந்த சில வாரங்களாக கனமழை பெய்து வருகின்றது.

இந்நிலையில் இக்கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவில் சிக்கி இதுவரை 120 பேர் உயிரிழந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அதுமட்டுமல்லாது இவ் இயற்கை அனர்த்தங்களால் நூற்றுக்கணக்கான வீடுகள் மற்றும் வாகனங்கள் சேதமடைந்துள்ளதாகவும், இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிப்படைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 15 டிசெம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.